www.tamilarangam.net

2000 - ஒகஸ்ட் - இதழ் - 25

# சக்தி

# இரண்டாவது தசாப்தத்தில் காலடி...



சக்தி இணையத்திலும்
http://www.geocities.com/pennsakthi

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்தி

1990-2000

# 10 வருட சவால்களை எதிர்கொண்டு...

இந்த வருடம் ஒகஸ்ட் மாதத்துடன் சக்தி தனது பத்தாவது ஆண்டினை நிறைவு செய்யும் இந்த வேளையில் நாம் கடந்து வந்த பாதையை நினைவு கூர கடமைப்பட்டுள்ளோம்.

1990 ஒகஸ்டில் மைத்ரேயின் முழுமுயற்சியினாலும், சுகிர்தா, கலிஸ்டா இராசநாயகம் ஆகியோரின் பங்களிப்புக்களுடனும் காலாண்டிதழாக ஆரம்பிக்கப்பட்டது சக்தி.

1992ஆம் ஆண்டு மார்ச் இதழுடன் சக்தியின் ஆசிரியர் குழுவில் அங்கம் வகித்த மைத்ரேயி விலகிக் கொண்டார்.

அதற்குப் பின்பு குறிப்பிட்ட கால இடைவெளிக்குப்பின் சக்தி மீண்டும் வெளிவரத் தொடங்கியது இதுவரை 24 சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. இது வரை வெளிவந்துள்ள சக்தி சகலரையும் திருப்திப்படுத்தும் விதமாக அமையாத போதிலும் சஞ்சிகை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பது உண்மையாகும்.

ஆரம்பத்தில் சந்தா சேகரிப்பதற்காக நாங்கள் வீடுவீடாகவும், பஸ்தரிப்பிடம் புகையிரத நிலையம் போன்ற இடங்களில் தென்பட்ட ஆசிய முகங்களுடன் எல்லாம் நாம் பேச முயற்சித்தோம்.

ஆரம்பத்தில் சுவரொட்டிகள், தேபான் நிலையத்தில் சஞ்சிகையை எரித்தமை போன்ற எதிர்ப்புக்களுக்கும், எதிர்காலத்தில் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கு சார்பான சஞ்சிகையாக சக்தி வெளிவரும் என்ற சில புத்தி சீவிகளின் பிரச்சாரங்களுக்கும் நாம் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டது.

1992ம் ஆண்டில் சக்தியை நான் தனியாக பொறுப்பெடுக்கும் போது என்னால் தொடர்ந்து சக்தியை கொண்டுவர இயலுமா என நான் தயங்கிய வேளையில் என்னுடன் தோள் கொடுத்தவர்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

பல சிரமங்களுக்கு மத்தியிலும் கவிதை, கட்டுரை, சிறுகதை, விமர்சனம் என்பவற்றை எழுதியும் ஆக்கங்களைச் சேகரித்தும் வழங்கியது போல தொடர்ந்தும் உதவுவதாக உறுதியளித்த ராஜினிக்கும், சொந்த வீட்டைவிட்டுப் பிரிந்து குழந்தையுடன் வசித்த போதும் தனது ஆதரவையும் உற்சாகத்தையும் வழங்கிய தோழி அநாமிகாவுக்கும் தோழமையுடான வாழ்த்துக்களைக் கூறிக் கொள்கிறோம்.

அத்துடன் சக்தியின் வடிவமைப்பில் எமக்குதவிய பிரேம்ராஜ் (நோர்வே), மற்றும் ரவி (சுவிஸ்) ஆகியோருக்கும் எமது இதயபூர்வமாக நன்றிகள்.

இந்த பத்து வருட காலத்தில் சக்தியுடன் இணைந்து செயற்படும்படியும் சக்திக்கு ஆக்கங்கள் வேண்டியும் நாம் தொடர்பு கொள்ளாத இடங்களே இல்லை என்று கூறலாம். ஐரோப்பிய சூழலில் வேறு பெண்கள் சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருந்த வேளையில், நாம் அவர்களிடம் சக்தியோடு இணைந்து செயற்படும்படி பல முறை வேண்டுகோள் விடுத்திருந்தபோதிலும் யாரும் எம்முடன் கைகோர்க்க விரும்பவில்லை. அதற்கு பல காரணங்கள் இருக்கலாம். அவர்களுடைய அரசியல் பின்னணி... எங்களுடைய அரசியல் பின்னணி... இன்ன பிற காரணிகளைக் நாம் கூறலாம்.

பார்க்க கடைசிப்பக்கம்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ச் சமூகத்தில்
# விதவைகள்

-குயின்

> விதவை என்கிற பதத்துடன் சக்தி உடன்படாத போதிலும் இக்கட்டுரையின் முக்கியத்துவம் கருதி கட்டுரையாளரின் வேண்டுகோளுக்கிணங்க அப்பதத்துடன் இக்கட்டுரையை அப்படியே தருகிறோம்.

இலங்கையில் இன ரீதியான யுத்தத்தில் இதுகாறும் அறுபதினாயிரத்திற்கும் அதிகமான யுத்தத்தில் ஈடுபடாத பொது மக்கள் பலியாகியுள்ளனர். குறிப்பாக இளைஞர்கள், குடும்பத் தலைவர்கள் என்ற வட்டத்தில் வைத்தே ஆண்கள் கொல்லப்பட்டனர். இவர்களே வருமானம் ஈட்டுவோராகவும் இருந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகவும் குறைந்த மதிப்பீடாக 10,000கும் மேற்பட்ட விதவைகள் உள்ளதாக தொண்டர் ஸ்தாபனமொன்று ஓராண்டிற்கு முன்னர் செய்த ஆய்வறிக்கையில் குறிப்பிட்டிருந்தது. இவர்களில் கணிசமானோர் தமது குடும்பத்தின் பாரத்தைச் சுமக்க வேண்டிய நிலையில் உள்ளனர். 1990ஆம் ஆண்டிற்குப் பின்னர் கொண்டுவரப்பட்ட கடல் வலயச் சட்டத்தினாலும் 1995ஆம் ஆண்டு யாழ் நகரை இராணுவம் கைப்பற்றியதிலிருந்து 650ற்கும் மேற்பட்டோர் காணாமற் போயுள்ளனர். இவர்களில் அனேகர் திருமணம் முடித்த இளம் வயதினர். யுத்தத்தினால் தமிழ்ப் பெண்கள் மட்டுமல்ல அதேயளவு தென் பகுதிச் சிங்களப் பெண்களும் பாதிப்படைந்துள்ளனர். சண்டையில் ஈடுபட்டுள்ள படையினர் பெருந்தொகையாக இறப்பதும் இடைக்கிடை சிங்களக் கிராமங்களில் நடைபெற்ற படுகொலைகளிலும் பல பெண்கள் தம் குடும்பத் தலைவர்களை இழந்துள்ளனர். தன் மகன் இறந்து போனதற்கு காரணம் தன் வீட்டிற்கு வந்த மருமகனின் துரதிஸ்டமே என்று மருமகளை வீட்டைவிட்டுத் துரத்திய மாமியார் பற்றிய செய்திகள் பத்திரிகை வழியாக அறிய முடிகிறது. எனவே எங்குமே கணவனை இழந்த பெண்களின் வாழ்க்கை அனுபவங்கள் சாதாரண பெண்களின் வாழ்க்கை அனுபவங்களிலிருந்து வேறுபட்டே உள்ளது. இந்தப் பின்னணியில் தமிழ்ச் சமூகத்தில் விதவை நிலையின் தற்போதைய இருப்பு பற்றியே இக்கட்டுரை பேசுகிறது.



இச்சமூகம் தொடர்ந்து தவிர்க்க முடியாத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

படி போர்ச் சூழலில் சிக்கியிருப்பதானது ஒவ்வொரு சமூக மணங்களிலும் அவர்களது அனுபவ உள்வாங்கலுள்கேற்ப வெவ்வேறு ஆழங்களில் தன் பதிவுகளை வழங்கிச் சென்றுள்ளது. நீடித்த போர்ச் சூழலும் அதன் பக்கவிளைவுகளின் காரணமாக ஏற்படும் விதவைகளின் உருவாக்கம் பற்றிய ஒரு விழிப்புணர்வும் இதுஓர் சமூகப்பிரச்சினை என்ற நிலைப்பாடும் அங்கே பல மட்டங்களிலும் உணரத் தொடங்கி அரச, அரசசார்பற்ற, மத நிறுவனங்கள் யாவும் இவர்கள்பால் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன. ஏனெனில் சமூகத்தின் எதிர்கால நல்வாழ்வுக்கு இவர்கள் தடைக்கல்லாக இருப்பார்கள் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களை நச்சுவளையம் போல சுற்றியிருக்கும் சமூகத்தாக்கம் பண்பாட்டு அழுத்தம், பொருளாதார நெருக்கடி உளவியல் சிக்கல் இவைகள் காரணமாக ஏற்படும் அந்நியமாகும் போக்கு... போன்ற பலவற்றை இனங்காண்பது அவசியம்.

குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் கணவனை இழந்தபோது மட்டுமல்ல அவள் பிறந்தது முதல் சமூகவரையறைக்குள்ளேயே வாழவேண்டியவளாகிறாள். பெண் கன்னிப்பருவத்தில் தன் காலை எடுத்து வைக்கும்போது அவள் ஒரு பாலியல் நபராகவே கணிக்கப்படுகிறாள். இதனால் பெண்ணின் ஒழுக்க ரீதியான கட்டுப்பாடுகள் விரிவான முறையில் மேலெழுந்தவாரியாக ஓங்குகின்றன, இறுக்கமாகின்றன. பெண்ணினுடைய பூப்புக்காலம் அப்பெண்ணிற்கும், அவளது குடும்பத்திற்கும் இருசாரருக்குமுள்ள விதிக்கான ஓர் சோதனைக்காலம் எனக் கருதப்படுகிறது. குடும்ப கௌரவம் கெட்டுப்போகலாகாது என்ற தலைப்பில் இவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டது. பெண்கள் திருமணம் செய்தவர்களாக இருக்கும் நிலையினை "சுமங்கலிகள" எனப்பெயர் சூட்டுவதன் மூலம் அவர்களை ஆண்மைத்தனத்திலிருந்து வேறுபடுத்தும் அடையாள ரீதியான வேறுபாடுகளை உணர்த்தினர். இறுதிக்கட்டமான விதவைப்பருவமானது அதாவது கணவனை இழந்த பெண்ணின் நிலையான "அமங்கலி" எனும் கட்டமாகும் இச்சொல் சுமங்கலி நிலைப்பட்டிற்கு நேர்மாறான "அமங்கலமான" நிலைப்பாடாகும். தாரம் இழந்தவர்கள் என்றும் அபசகுனம் உடையவர்கள் என்றும் சமுதாய வரிசையில் கீழ் நோக்கப்படுகின்றனர். இவர்களது கவர்ச்சிக்குரிய வெளித்தோற்றங்களை உருவாக்கும் சின்னங்கள் படிப்படியாக அகற்றப்படுகின்றன. விதவைப் பெண்கள் குழந்தை பெற்றெடுக்கும் ஆற்றல் கொண்டவளாதலால் குடும்ப கௌரவத்திற்கு அச்சுறுத்தல் விடுக்கும் நிலையில் இருப்பதாக ஊகம் தெரிவிக்கப்படுகிறது. விதவையாக்கப்பட்ட பெண்ணொருத்தி குடும்ப நிதிநிலை காரணமாக விபச்சாரியாகலாம் எனும் கருத்துக்கு சார்பாக வாதாடத் தயங்குகின்றனர். இதனாலேயே இவர்கள் மீதான சமுதாய ரீதியான கட்டுப்பாடுகள் இறுக்கமாகின்றன இவ்வாறு தமிழ்ப் பெண்களின் வாழ்க்கைச் சுழற்சி அமைகின்றது.

இன்றைய தமிழர் சமூக அமைப்பில் குடும்பம் ஒரு தனிப்பொருளாதாரக் கூறாக அமைகிறது. பெண் குடும்பத்தின் நடைமுறைகள் சட்டதிட்டங்கள் வழக்காறுகள் சடங்குமுறைகள், ஒழுக்க வரம்புகள் அனைத்திற்கும் அவள் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றனர். இத்தகைய நிலைப்பாட்டினால் தமிழ்ப்பெண்கள் அடுத்தவர்களில் தங்கிவாழ நேரிட்டது. பெண்களின் தங்குநில வாழ்வானது நாம் அவதானிக்கும் மிகவும் சோகமான சமூக மெய்யுண்மையாகும். இது பெண்களின் மன வளர்ச்சியிலும் சமூக முன்னேற்றத்திலும் பாரதூரமான தாக்கத்தை விளைவிக்கின்றது. மனித வாழ்வின் சிக்கலான சவால்களுக்கு முகம் கொடுக்கத்திராணியற்றவர்களாகவும் அவர்களை ஆக்கிவிடுகிறது. குடும்பச் சூழலில் பெற்றோரது கருத்துக்களால் உருவமைக்கப்படும் பெண் குழந்தைகள், தங்கு நிலையான மனோபாவத்தில் வளர்த்தெடுக்கப்படுகிறார்கள். இவ்விதம் பெண் பிள்ளைகளது மனம் உருவகிக்கப்படும் வேளையில் இன்னொரு புறத்தில் வித்தியாசமான சமூகமயமாக்கல் நிகழ்கிறது. அதாவது பெண்களைப் பேணிக்காப்பதே தமது சமூகப்பங்கு என குடும்பத்தின் ஆண்களான தந்தையரும் சகோதரர்களும் எண்ணிக் கொள்கிறார்கள். இறுதியில் தந்தையும் கணவன்மாருமே பிரதான பாதுகாவலர் என்ற நிலைக்கு வருகின்றனர். பெண்களின் சமூக அந்தஸ்து, சமூக உயர்வு, பொருளாதாரப் பாதுகாப்பு ஆகியன கணவனின் வாயிலாகவே கிடைக்கப்பெறுகின்றது. எனவேதான் திருமண உறவானது ஒரு பெண்ணின் சமூகவாழ்விற்கு முக்கியமானது. இன்று கணிசமான தொகையில் பெண்கள் கல்வி பயில்கின்றனர். அத்துடன் தொழில் துறையிலும் ஈடுபடுகின்றனர். இவைகள் பெண்கள் தம் வாழ்வை வலுப்படுத்திக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளவும் சமூகரீதியான முன்னேற்றம் காணவும் உதவுகின்றது. ஆனால் இவையனைத்தையும் மறுதலிப்பது போல பிற்போக்கான கலாசார அம்சங்கள் அவர்களது வாழ்வை நிர்ணயிக்கும் சக்திகளாக அமைந்து விடுகின்றன. இதனால் கல்வியறிவு மற்றும் தொழில்வாய்ப்பு வாயிலாக அவர்கள் பெற்றுக்கொள்ளும் முற்போக்கான பெண் விடுதலைக்கான பண்பியல்புகள் முழுமையாக நிறைவு காணப்படுவதில்லை. ஆண்களுடன் அவர்களது உறவுகளில் "பால்" வேறுபாடு தலைதூக்கவே செய்கிறது. சமூகத்தின் பண்பாட்டு ஒடுக்குமுறைக்கூடாகவே அவர்களும் திருமணம் செய்துகொள்ள நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். கணவன் இறந்து பின்னர் பெண்ணொருத்தி பல்வேறு வழிகளிலும் ஒதுக்கப்பட்டுவதானது ஆணினுடைய இவ்வுலக அத்தியாயம் முடிந்த பிறகும் அவனுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தையும் பால் வேறுபாட்டின் உச்சநிலையையுமே காட்டுவதாக அமைகிறது. காலம் காலமாக சமுதாய அங்கீகாரம் பெற்று, ஏற்று, ஒத்துக் கொள்ளப்பட்ட பாரம்பரியங்களை தகர்க்க பெண்கள் பின் நிற்கின்றனர். அவையெல்லாம் தர்க்க ரீதியானவையல்ல என்பதை உணர்வதில்லை. காலத்துக்கு ஒவ்வாத வழமையை, எழுதாத சமூகச் சட்டங்களை ஆண்களைவிட அதிகம் பேணுவோர் பெண்களாகவே இருக்கின்றனர். இவைகளை இவர்கள் மீள முடியாத சமூக விதிகளாகவே கருதுகின்றனர். அதனால் தான் பாலியல் சித்தாந்தத்தை அன்றாட வாழ்வில் விருத்தி செய்வதில் பெண்கள் முக்கியமானதோர் பாத்திரத்தை வகிக்கிறார்களென நாம் கூறலாம்.

**அங்கே வாழும் ஒவ்வொரு தனிமனித மனமும் எந்தக்கணம் தனது உயிர் பிரியும் தான் ஊனமாவேன், என்பதையோ தனக்குத் தெரிந்தவர்கள் இறப்பர், ஊனமாவர் என்பதையோ முன்கூட்டியே பதிந்து வைத்து தமது வாழ்தலை இழுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் நம் அனைவராலும் உணர்ந்து கொள்ளக்கூடியதொன்றாகவே இருக்கின்றது.**

பெண் பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்கள் பரீட்சையில் சித்தியடையாத பட்சத்தில் பாடசாலைக் கல்வியிலிருந்து இடை நிறுத்தப்படுவதே பெரும்பாலும் நடைமுறையிலுள்ள வழக்கமாக இலங்கையில் காணப்படுகின்றது. இவர்களிற் பலர் வேறு சுயதொழில் முயற்சிக்கான பயிற்சிகள் எதிலுமே ஈடுபடாமல் வீட்டுக்குள்ளேயே சமையல் சார்ந்த வேலைகளைச் செய்வதில் தமது நேரத்தின் பெரும்பகுதியைச் செலவிடுகின்றனர். இந்தப் பின்னணியில் வளர்ந்த பெண்களது கணவன்மார் இறந்து போவதால் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர். உறவினரது பராமரிப்பு அவர்கள் மேல் இல்லையென்றால் அவளும் குழந்தையின் வாழ்வு அனைத்திற்கும் அந்தச் சமூகத்தின் கைகளையே எதிர்பார்க்க வேண்டிய சூழ்நிலையேற்படுகிறது. ஏனெனில் கணவன் செய்துவந்த தொழில்களை அவர்களால் செய்ய முடியாது, மேலும் பலர் வேறு வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்வதற்கான கல்வியறிவைப் பெறாதவர்கள், இந்நிலையில் நாளாந்த வாழ்க்கை நடத்துவதற்கே இவர்கள் போராட வேண்டியுள்ளது. பின்னர் அந்தக் குடும்பத்திலுள்ள ஆண்மகன் அவன் சிறுவனோ அல்லது இளைஞனோ படித்துக் கொண்டிருக்கிறானோ இல்லையோ தகப்பனின் தொழிலை குடும்ப ஜீவனோபாயத்துக்காக செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றான். இவ்வாறான நிலையில் அவனும் இறந்தாலோ அல்லது காணாமற்போனாலோ அக்குடும்பம் இன்னும் பொருளாதாரத்தில் பின்தங்கும் நிலையேற்படுகிறது. இதனால் பிள்ளைகள் பாடசாலையைவிட்டு இடைநிறுத்தப்படும் தன்மையும் இலங்கையில் அதிகம் காணப்படுகிறது. சிலருக்கு உறவினரது உதவிகள் கிடைப்பதால் அவர்களின் பொருளாதாரத்தில் கணிசமான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. ஆனால் பெரும்பாலும் இளம் விதவைகள் பெற்றோரில் தங்கியிருக்க வேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள். குடும்பத்தின் பொருளாதாரச் சுமையைத் தாங்கிக்கொள்ள முடியாதபோது பலவித உளக் குழப்பங்களைச் சந்திக்கின்றனர். இளம் வயதில் திருமணம் செய்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொள்ளும் பெண்கள் மிகக்குறுகிய காலத்தில் விதவையாகிவிடும் போது குடும்பப் பொறுப்பில் முதிர்ச்சியற்ற நிலை போதிய மன வளர்ச்சியற்ற தன்மைகள் அதனால் மனமுறிவுகளையும் சகிப்புத்தன்மைகளையும் தாங்கிக் கொள்ளும் சக்தியற்றவர்களாகவே இருக்கின்றனர்.

சாதாரண ஓர் நிலையில் கணவனை இழந்த பெண்ணும் போர்க்கால அனுபவத்தால் கணவனை இழந்த பெண்ணும் பெறும் மனவடுவின் அனுபவம் வித்தியாசமானது. தன் கணவன் ஒரு நோயாளி, படுத்தபடுக்கையாகக் கிடக்கிறான், அவனின் உடல் இயக்கங்கள் நாளுக்கு நாள் வலுவிழந்து போகின்றன. எல்லோரும் அவனை வந்து பார்க்கின்றார்கள்... இதனால் இழப்பை ஏற்றுக்கொள்ளும் தன்மை அவளுக்கு ஏற்படுகின்றது. இந்த அனுபவம் சடுதியானதாக, எதிர்பாராததாக, ஆழமானதாக இருக்காது. ஆனால் போர்க்கால அனுபவத்தால் கணவனை இழக்கும் பெண் பெறும் அனுபவம் வேறானது.

சடுதியானது. எல்லோருடனும் ஒன்றாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர் அடுத்த நமிடம் இரத்த வெள்ளத்தில் கிடக்கிறார். எதிர்பாராதது, மிக ஆழமானது அதாவது உணர்வின் ஆழமான அதிர்ச்சியின் அனுபவத்தைப் பெறுகின்றாள். இந்த அனுபவத்தை ஏற்றுக்கொள்ள முடியாததும் சரிப்படுத்த முடியாததுமான நிலையில் இருக்கின்றாள். இவர்களிடம் இழப்புநிலை, தனிமையுணர்வு, பயம், பாதுகாப்பின்மை, தன்னம்பிக்கை இழந்தநிலை, கடமையுணர்ச்சி, ஒதுங்கும் சுபாவம், அழுகை, விரக்தி, சோர்வு, வெறுப்பு... போன்ற பல மன வெளிப்பாடுகள் காணப்படுகின்றன. யாழ் குடாநாட்டில் நடாத்தப்பட்டு பிரித்தானிய உளமருத்துவ சஞ்சிகையில் வெளியாகிய ஆய்வொன்று பொதுமக்களில் 27 வீதத்தினர் நெருக்கீட்டிற்குப் பிற்பட்ட உளவடுவினால் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் 65 வீதத்தினர் ஏதாவது ஒருவகையான உளக்குழப்பத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஆய்விலே விதவைப்பெண்களும்அடங்குவர்.

இப்பெண்களிடத்தில் உளவியல் சார்ந்த விளைவுகளில் ஒன்றான அந்நியமாகும் போக்கும் காணப்படுகிறன்றது. பாரம்பரியமான சடங்கு, சம்பிரதாய மரபு என்பன இவர்களை அந்நியமாக்குகின்றமை ஒருபுறமிருக்க இவர்களிடம் சுய அந்நியமாதலையும் காணமுடிகிறது. அதாவது சமூக சடங்குகளில் மட்டுமன்றி வீடுகளிலேயே தமது பெற்றோர் சகோதரர்களிடமிருந்து அந்நியப்பட்ட நிலையில்தான் உள்ளனர். ஏன் இவர்களின் இடைவினைகளிலே இவ்வாறான மாற்றம் ஏற்படவேண்டும்? சமூகவியலாளர்கள் அந்நியமாதலைப் பற்றி கூறுவது இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். "ஒருவன் தனது உண்மைப்பொருளை இதர மனிதனுடன் கொண்டுள்ள பரஸ்பர தொடர்புச் செயல்கள் மூலமே பெறுகின்றான். அப்படியானால் அவன்தன் உண்மைப்பொருளை இழப்பதென்பது அல்லது அதைப்பற்றிய பதற்றம் கொள்வதென்பது தனிமனிதப்பிரச்சினை மட்டுமல்ல சமுதாயப்பிரச்சினயாகும்." என்றனர். இதேபோன்றே விதவைகளும் தாம் சேர்ந்திருக்கின்ற சேர்ந்திருக்கவேண்டிய குழுவிலிருந்து வெட்டிப் பிரிக்கப்படும்போது அவள் தன்னைத்தானே அந்நியமாகக் கருதத்தொடங்குகிறாள். இதர மனிதர்களுடன் அர்த்தமுள்ள உறவுகளைப் பெறத்தவறும் போது அவள் தன்னில் ஒரு பகுதியை இழக்கின்றாள். அதேவேளை இந்த அந்நியமாதலையும் உளநெருக்கடிகளையும் தாண்டி நம்பிக்கையோடு சமூகப்பணிகளின் வழி தமது ஆளுமையை வெளிப்படுத்துகின்ற பெண்களும் இல்லாமலில்லை. இருந்தாலும் இது விரல்விட்டு எண்ணக்கூடிய மிகச்சிறிய அளவிலேயே இருப்பதை குறிப்பிட வேண்டும்.

முன்னர் கூறப்பட்டதுபோல பெண்களின் சமூகமயமாக்கலில் விதவைகள் இப்படித்தான் வாழவேண்டுமென்ற எண்ணமும் பல மாதிரிகளை உள்வாங்கிய நிலையில் தாமும் அதே மரபினைக் கடைப்பிடிப்போராகவே பலர் உள்ளனர். ஏனெனில் சமூகமயமாக்களில் "விதவைகள்" என்ற எண்ணக்கரு வலுப் பெற்றுள்ளது. அங்கே எதிர்ப்புணர்ச்சியென்பது குறைவு அநுசரித்து போதல் ஆகிய பண்புகளே அதிகம் காணப்படுகிறது. சமூகத்தில் முத்திரையிடப்பட்டுள்ள விதவையென்ற சொல்லிற்கேற்ப தம்மை மாற்றிக்கொள்வதிலும் வாழ்வதிலுமே கருத்தாக இருக்கின்றனர். இவைகளைத் தாண்டும்போது சமூகத்தின் பிற்படுத்தலுக்கு ஆளாகவேண்டியுள்ளனர். குறிப்பாக பொருளாதாரத்தில் தங்குநிலையற்ற பெண்களே பெரும்பாலும் இவ்வாறான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களை மீண்டும் மறுமணம் செய்து கொள்வதற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு ஆண் தயாராக இருந்தாலும் சமூகத்தின் எதிர்ப்புடன் அவளது குடும்பத்தவரது மறுப்பையும் சந்திக்க வேண்டியுள்ளது. இதனால் மறைமுகமாக "தவறான பாதை"யில் செல்வதற்கான சந்தர்ப்பத்தையே சமூகம் அவளுக்கு ஏற்படுத்திக் கொடுக்கின்றது. தேவை கருதி வெளியில் சென்றுவரும் பெண்களுக்கு சமூக விமர்சனங்கள் அவர்கள் மனதைச் சோர்வடையச் செய்கின்றது.

*'...எனது கணவர் கடற்றொழிலுக்குச் சென்றவேளை காணாமற் போய்விட்டார் அவர் இருந்த போது விதானைவீடு. கச்சேரி எங்கே இருக்கென்றே தெரியாது. அவர் இல்லாதபோது உணவு முத்திரை எடுப்பதற்கோ. இறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்கோ நான்தான் போக வேண்டியுள்ளது. என்னிடமுள்ள ஒரிரண்டு நல்ல சாறிகளையும் உடுத்திக்கொண்டுபோனால் எங்கே ஒவ்வொருநாளும் போய் வருகிறாள். என்று கதைக்கிறார்கள். அவர் இருந்தபோது கஞ்சியோ. கூழோ குடித்து நிம்மதியாக இருந்தேன் இப்போ*



*எல்லோருக்கும் பயந்து. பயந்து போக வேண்டியிருக்கு. நட்டஈட்டைவிட எனது கணவர் திரும்பி வரவேண்டும் சொத்தியோ. முடமோ என்றாலும் பரவாயில்லை. வீட்டில் இருத்திவிட்டு நான் உழைத்துப் பார்ப்பேன்..."*

என்றாள் ஒரு பெண்.

எனவேதான் எதிர்ப்புணர்ச்சியை அல்லது எதிர் நடவடிக்கையைக் காட்டுவதால் ஏற்படும் பிரச்சினைகளை விட சமூக நடைமுறைகளுக்கேற்ப தம்மை ஒழுங்குபடுத்திக்கொண்டு வாழ்வது பாதுகாப்பானது என எண்ணிக்கொள்கின்றனர். மேற்கூறப்பட்ட தாக்கங்கள் மனைவியை இழந்த ஓர் ஆணுக்கில்லை. இவர்கள் தம் அந்தஸ்துகளை இழப்பது குறைவு. ஒருவித தளர்வான, இறுக்கமற்ற சுதந்திர உரிமையை சமூகம் அவர்களுக்கு அளித்திருக்கிறது. இவர்களுக்கான புறச்சின்னங்கள் எதுவுமில்லை. அவர்கள் மறுமணம் செய்துகொள்வதிலுள்ள பெறுமதி பெருமளவு தேய்வதில்லை. குறைத்து மதிப்பிடப்படுவதில்லை பெண்கள் எமது சமூகத்தில் கூடுதலாக பாதிக்கப்படுவதற்கு காரணம் ஆண்கள்மயப்பட்ட ஆய்வுகள், கோட்பாடுகள் என்பனவற்றின் மூலம் தவறான விழுமியங்கள் மதிப்பீடுகளை சமூகமயமாக்கல் வழியாக கொடுக்கப்பட்டதாலாகும் என பெண்ணிலை ஆய்வாளர்கள் கூறுகின்றனர். எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை பெண்ணிலை ஆய்வுகள் பெருமளவுக்கு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்றே கூறவேண்டும். அவ்வாறாக மேற்கொள்ளப்பட்ட சிலவும்கூட பெரும்பாலும் வெறும் கருத்து நிலையான விவாதங்களாகவே அமைந்திருந்தமையைக் காணலாம். அண்மைகால அரசியல் விழிப்புணர்வு மற்றும் யுத்த விளைவுகளின் அடியாகவே யதார்த்த நிலையில் பெண்களின் பிரச்சினைகளை உணரவும் அவற்றினை சமூகவியல் ரீதியாக புரிந்து கொள்ளக் கூடிய முயற்சிகளும் அண்மைக் காலத்தில் தான் ஓரளவு வெளிப்படுவதையும் இங்கு குறிப்பிடவேண்டும். சமூக பொருளாதார உளவியல் மட்டத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு இம்மூன்றினை உள்ளடக்கிய புனர்வாழ்வு நடவடிக்கையே இன்றிமையாதது என்கின்றனர்.

சமூக மட்டத்தில் விதவைப் பெண்களுக்கு இருக்கின்ற ஏற்றத்தாழ்வுகளை அகற்றவேண்டுமெனவும் முக்கியமாக மறுமணம் பற்றிய சிந்தனை தொடர்பான சமூகமனமாற்றம் அவசியமெனவும், குறிப்பாக அதிகரிக்கும் இளம் விதவைகளின் சமூக உளவியல் நிலைமைகளைக் கருத்திற்கொண்டேனும் இத்தகு சமூக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றத்திற்கான அவசியம் உணரப்படவேண்டும்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட குறிப்பாக விதவைகளுக்கென யாழ் மறைமாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள "அன்னம்மாள் சபை" மூலம் இழப்பை ஏற்றுக்கொள்ளவும் தமது பிரச்சினைகளை பகிரவும் உளவியல் ரீதியான ஆற்றுப்படுத்தலையும் பெற்றுக்கொள்கிறார்கள். அத்துடன் இளம் விதவைப் பெண்களுக்கு மறுமணம் தொடர்பான ஆலோசனைகளும் வழங்கப்படுகிறது. இத்தகு சமயநோக்குகள் மானிட அந்நியமாதலுக்கு ஒரு மாற்றாக இழப்பை ஈடுகட்டும் அம்சமாக பணியாற்றுகிறது. இச்சபையானது சமயம்சார் கட்டுப்பாடுகளுக்கும் வெளியே பரவ வேண்டுமெனவும் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்கள் இவ்வாறு ஒரு சமூகமாக ஒன்றிணைந்து கொண்டிருப்பதானது பெண்கள் இனியும் தனித்தியங்க முடியாதவர்களாக குழுமமாக இயங்க வேண்டியவர்கள் என்பதையே குறிக்கின்றது. கணவன் இறந்து அல்லது காணாமற் போய் பல வருடங்களாகியும் அரச நஸ்டஈடு இன்னும் கிடைக்காத நிலையில் பெண்கள் பணிக்குழு, ஆட்சி அதிகாரிகளை அடிக்கடி சென்று சந்தித்தும் பெறமுடியாத நிலையில் உள்ளனர்.

அதேவேளை அரச சார்பற்ற - சமூக சேவை அமைப்புக்கள் விதவைப் பெண்கள் சுயவருவாய் பெறும் நோக்கில் சில திட்டங்களை அறிமுகப்படுத்தினாலும் பாரப்பரியமான வேலைகளை உள்ளடக்கிய திட்டங்களாகவே அவை அமைகின்றன. உதாரணம் கோழிவளர்ப்பு, கால்நடை வளர்ப்பு போன்றன. ஆனால் இத்திட்டங்கள் யாவும் மரபுவழி புறநிலையை மேலும் உறுதிசெய்யவும் தங்கிநிற்கும் நிலையை அதிகரிக்கவும் துணையாகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக போரையும் அது சார்ந்த நடவடிக்கைகளையும் முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென கோரப்படுகிறது. ஏனென்றால் பெண்கள் விதவைகளாவதற்கு சண்டையில் ஈடுபட்டுள்ள இரு சாரருமே காரணமாவார்கள். போரை நிறுத்தினால் விதவைகளின் அதிகரிப்பு சடுதியாகக் குறைய வாய்ப்புண்டு. ஆனால் இன்று அங்கேயுள்ள நிலைமையோ முற்றிலும் நேர்மாறாகவே இருக்கிறது. தமிழர் பிரதேசத்தில் ஒரு பக்கம் இராணுவ முற்றுகையும், தாக்குதல்களையும் தொடர்கையில் மறுபக்கம் தொடர்ந்து இடம்பெறும் வழிமறிப்புகளும், கைதுகளும், காணாமல் போதல்களும், தண்டனைகளும், காட்டிக்கொடுப்புகளும் தொடர்ந்த வண்ணமுமே இருக்கின்றன. அங்கே வாழும் ஒவ்வொரு தனிமனித மனமும் எந்தக்கணம் தனது உயிர் பிரியும் தான் ஊனமாவேன், என்பதையோ தனக்குத் தெரிந்தவர்கள் இறப்பர், ஊனமாவர் என்பதையோ முன்கூட்டியே பதிந்து வைத்து தமது வாழ்தலை இழுத்துச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் நம் அனைவராலும் உணர்ந்து கொள்ளக்கூடியதொன்றாகவே இருக்கின்றது. அங்கு சமாதானம் என்பதோ ஒரு காலம் கடத்தும் எதிர்பார்ப்பு மங்கிக்கொண்டு போகும் நம்பிக்கையாகவே தோன்றுகிறது. அதனால்தான் போர்வழி விதவைகள் உருவாக்கத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் இருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது. எனவே அவர்களுக்கான பொருளாதார ரீதியான புனருத்தாபன நடவடிக்கைகளையும் பல்வேறு வழிகளில் விரிவுபடுத்த வேண்டிய நிலையிலேயே சமூக மத நிறுவனங்கள் யாவும் இருக்கின்றதாயினும் அதற்கான வருவாய் போதாமையால் உழைப்பாளரில் பெண்களில் மிகக்குறைந்தோருக்கே அவர்களது பொருள்சார் உதவிகள் போய் சேருகின்றன. அதனால் பாதிப்படைந்த அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களுக்கு பொருத்தமான கைத்தொழில் முயற்சிகளை உருவாக்குவதற்குமான நிதியை இவர்கள்பால் அக்கறை கொண்டோரிடம் வேண்டிநிற்கிறார்கள். இவர்களை பொருளாதார ரீதியில் முன்னேற்றிவிட்டால் அவர்களைப் பாதிக்கும் ஏனைய காரணிகளிலிருந்து தப்பிக்கொள்ளலாம் என நம்பப்படுகிறது. பெண் விடுதலைக்கான முன்தேவைகளை ஏங்கெல்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பெண்ணினம் முழுவதையும் சமூக உற்பத்தியில் மீண்டும் புகுத்துவதுதான் பெண்ணின் விடுதலைக்கு முதல் நிபந்தனை எனும் அவரது கூற்று விதவைகளின் சமூகவிடுதலைக்கும் மிகவும் பொருத்தமானது. புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாய் நாட்டுடனான ஈர்ப்பு பெருமளவில் அதிகரித்துவரும் இவ்வேளையில் அங்கு வாழும் உழைப்பாளரை இழந்த பெண்களுக்கான புனர்வாழ்வு நிதியை வழங்க இங்குள்ள தமிழ் சமூக மனங்கள் முன்வருமா என இக்கட்டுரை வினவிநிற்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புதைகுழிகள்

உலக அரங்கில்
புதைகுழிகள் புதிதல்ல
உயிர் குடிக்கும் கலையின் கோர வெளிப்பாடு.
உயிர்கள் குடிக்கப்பட்டு
உண்மைகள் உறக்கம் கொண்ட
செம்மணிப் புதைகுழிகள்.

பொய்யாகா உணர்வுகள்
மெய்யாகக் கலங்கி நிக்கும்.

ஓ! விழி நீர்
துவண்டும் ,துளிர்த்தும்
மனம் எழும்.

சீராட்டி தாலாட்டி
சீரும் சிறப்புமாய்
வழர்த்த பெற்றோர்
வலுவிழந்த
வனப்பிழந்து
சருகாய் நிக்கும் கோரம்.

சுற்றம் மௌனிக்க
சுடுகாடாய்
மனம் மட்டும்
மரணத்தை மறுத்து நிக்கும்

விழிகளோ நீரை சொரிந்து நிக்கும்.
விம்மி,விம்மி
மெய்,வாய்
எரிகல்லாய்
வெடித்து சிதறும்.

ரணமாய்,ரணமாய்
மனமான பின்பும்
திடமாய் எழவே
உணர்வுகள் துடிக்கிறது.

-நளாயினி தாமரைச்செல்வன்.

## உனக்குள் நீ...

உனக்குள் நீ சிரிக்கிறாய்
உணர்ந்தும் எதையும் உணராமல்
உண்மைக்குள் ஒளிகின்றாய்
கனவுகள் உனக்கு(ம் உண்டு)
வெறும் கதையாயின
கனவிலும் உனக்கு கலையாத
உறக்கமென
கணவிழிக்க மறுக்கின்றாய்
தட்டி எழுப்ப வந்தவனும் நின்
கனவில் ஒரு பாத்திரமானேன்
நேரத்தை போக்க எதையோ
சாட்டுகிறாய்

காதலை சாட்டுகிறாய், கடவுளை
சாட்டுகிறாய்
வாழ்க்கையை சாட்டுகிறாய்
தொலைந்ததைத் தேடி தொலையப்
போகிறாய்
பருவம் போனபின்
விதையிட்டுபயனில்லை
விதையிட்டேன் வித்தியில்லை என்றாதே
தளர்ச்சி என்ன தடைபோட்டது
என்றாதே
நீயே வாய்ப்புகளுக்கு
தடைப்போட்டுக்கொண்டு.

சுதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஈழத்தமிழர்களின் நாடக வரலாற்றில் கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஆழத்தடம் பதித்த நடிகைகளில் ஆனந்தராணி மிகவும் முக்கியமானவர். அவருக்கு ஈடு இணையான நடிகையை ஈழத் தமிழ் நாடகப் பரப்பில் காண்பது அரிது.பரதநாட்டிய தாரகையாக அறிமுகமாகி 25 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்து நாடகத்தில் பங்காற்றிவரும் ஆனந்தராணி. ஏறத்தாழ ஐம்பதுக்கும் மேற்பட்ட பல்வேறு நாடகங்களில் தனது நடிப்பாளுமையை வெளிப்படுத்தியுள்ளார். கிராமிய பாத்திரங்களில் இருந்து உலக பிரசித்திபெற்ற பல நாடகங்களில் முக்கியவேடங்கள்வரை அவரின் நடிப்பாற்றல் நாடகத்திற்கு உயிர் கொடுத்திருக்கிறது. நன்றாக பாடக்கூடியவரும் நாட்டியத்தில் தேர்ச்சி பெற்றவருமான ஆனந்தராணியின் நாடக அர்ப்பணிப்பு தமிழ் அவைக்காற்று கலைக்கழகத்தினுடைய பல சிறந்த நாடகங்களை உருவாக்க காரணமாக அமைந்திருக்கிறது. எண்பதுகளில் இருந்து இலண்டனில் இயங்கிவரும் ஆனந்தராணி. பரதநாட்டிய வகுப்புகளையும் நடத்திவருவதோடு க.பாலேந்திராவுடன் இணைந்து பல சிறுவர் நாடகங்களையும் இயங்கியுள்ளார். வெறுமனே ஒரு நடிகையாக மட்டும் தன்னை இனம்காட்டிக் கொள்ளாமல் தனது குரல் வளமையாலும் சிறந்த அவைக்காற்றும் தன்மையாலும் பல்வேறுபட்ட கலை நிகழ்ச்சிகளிலும் வானொலியிலும் அறிவிப்பாளராகவும் செயற்பட்டு வருகிறார்.புகலிடத்தில் தொழில்புரிந்து கொண்டு அத்துடன் ஒரு குழந்தைக்குத் தாயாகவும் இருந்து கொண்டு இத்தனை விடயங்களிலும் பங்கேற்பது வியப்புக்குரியது. கலைகள். சமூகவியல். பெண்ணியம் மீது பாரிய அக்கறை கொண்ட இலக்கியத்தேடல் மிக்கவர். தமிழ்ச்சூழலில் இயங்கிவரும் மேடைநிகழ்வுகளில் பெண்களின் பாத்திரம். அதில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் பின்னணிகள் போன்றவற்றை அவரின் நேரடியான அனுபவங்களினூடு இங்கே எங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

**உங்களை இத்துறைக்கு இட்டுச் பிரத்தியேகமாக காரணம் என்ற?**

நாடகம் எனக்கு மிகவும் விருப்பமானது. சிறுவயதிலேயே இருந்து பிரத்தியேகமாக நாடகத்தில இருந்த ஆர்வம்.பெண்கள் நாடகத்துறைக்கு வருவது மிகவும் குறைவு.நாடகம் என்னும் போது நாடகம் மட்டுமல்ல முன்பு நான் கதைகள் வாசிக்கும் போது சின்னப் பிள்ளையாக இருக்கேக்க மற்றவை கதைய வாசிக்கேக்க மனசுக்குள்ள வாசிப்பினம் நான் வெளியால சத்தமா வாசிக்கிறது. அப்படி நான் வாசிக்கேக்க எனக்கு கதையில வரும் பாத்திரங்கள் கதைப்பதை நடிப்பது போல வாசிப்பது அது இந்தக் கதைகள் மனசில பதியிற மாதிரியும் ஒரு வித்தியாசமான ஒரு அனுபவமும் வாரமாதிரியும் அந்த ஆர்வமும் நடிப்புக் கலையில எனக்கு கூடுதலாக இருந்த ஆர்வமும் தான் இந்த துறைக்கு முக்கியமாக வந்தமைக்கான முக்கிய காரணம்.

**உங்களுடைய முதலாவது நாடகமான என்ன என்று உங்களுக்கு நினைவிருக்கிறதா?**

பாடசாலை நாட்களில நிறைய நாடகங்களில் நடித்துள்ளேன் பாடசாலை நாட்கள் நாடகங்களை இங்கு நாம் கருத்தில் கொள்ளதேலையில்லை. அவை வித்தியாசம். தீவிர நாடகங்களிலிருந்து வேறுபட்டவை பாடசாலை நாட்களில் நான் பல நாடகங்களில் நான் நடித்துள்ளேன் மிகவும் ஆர்வத்தில் கலந்து கொண்டுள்ளேன். அதுதான் எனது ஆரம்பம் எனக்குத் தமிழ் படிப்பித்த ஆசிரியருக்கு தெரியும் எனது நாடகம் பற்றிய ஈடுபாடு . அத்துடன் அவருக்கு நான் சிறுகதைகளை வாசிப்பதும் தெரியும் சிலவேளைகளில் வகுப்புகளில என்னை வாசிக்க அனுமதிச்சிருக்கினம். நான் தீவிரமாக பாடசாலைக்கு வெளியே 1975 இல் நடித்த நாடகம் பிச்சைவேண்டாம் என்ற நாடகம் அந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடகத்தை எழுதியவர் அலெக்சியாசோ.ரஷ்சிய நாடகம் கட்டுப்பத்தை தமிழ்சங்கத்தினால் கலைவிழாவுக்காக தயாரிக்கப்பட்ட நாடகம். என்னுடைய முதலாவது நாடகம் அந்த நாடகம். ஒரு விதத்தில வித்தியாசமானது உங்களுக்குத் தெரியும் ரசியாவை பற்றி அவர்களுடைய கொள்கைகள் அந்த நாடகத்தில் பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்துள்ளேன் அந்த நாடகத்தில் பெண் முதல் கலியாணத் செய்யாத பெண்ணாக இருந்து திருமணம் செய்த பின்பு கணவர் இறந்து விட்டார் அந்த பெண் தனது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என முயல்கிறார் இது மிகவும் பழைய கால ரசியாவில் நடந்தது. கணவரின் நண்பர்கள் சொல்கிறார்கள் அவருடைய வாழ்கையை நடாத்துவதற்கு தாம் உதவி செய்வதாக அவருக்கு குழந்தைகளும் இருக்கின்றன இருந்தபோதிலும் அவர் உங்களுடைய பிச்சை ஒன்றும் வேண்டாம் என சொந்தக்காலில் நின்று தான் தனது வாழ்க்கையைக் கொண்டு நடத்தவதாக முடிகிறது.

**நீங்கள் நாடகத்துறையில் சந்தித்த அநுபவங்கள் என்ன என்று எம்முடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

ஆம் நான் நிறைய அநுபவங்களைச் சந்தித்துள்ளேன். பொதுவாக நான் முன்பு குறிப்பிட்டது போல பெண்கள் பொதுவாக நாடகத்தறையில் ஈடுபடுவது சரியான குறைவு. நான் தமிழ் பெண்களைப் பற்றியே குறிப்பிடுகிறேன் தென்னிந்தியாவிலே கூட . சினிமா வேறு நாடகம் வேறு .தீவிர நாடகத்திற்கு பெண்களின் பங்களிப்பு மிகக் குறைவு இப்பவும் அப்படித்தான் இருக்கிறது இலங்கையில் எனக்குத் தெரிந்த காலத்திலேயே பெண் பாத்திரம் எனில் ஆண்கள் தான் பெண் பாத்திரம் ஏற்று நடித்துள்ளார்கள் .மிகச்சிறந்த நடிகர்கள் கூட நடித்துள்ளார்கள். குறிப்பாகச் சொல்லப் போனால் பிரான்சிஸ்ஜனம் சிறந்த நடிகர் எனக்கு அவரை பெண் பாத்திரம் ஏற்று நடித்த நாடகத்தில் நான் பார்த்து தான் தெரியும் அவர் குந்தியாக நடித்த நாடகத்தை நான் பாத்தேன். கட்டுப்பத்தையில் 1975 இல் பிச்சைவேண்டாம் நடிக்கும் போது எனக்கு மிகவும் இளம் வயது .அந்த நாடகத்தில் கட்டுப்பத்தை பல்கலைக்கழக இளைஞர்கள் நடித்திருந்தார்கள். 20 பேர்வரை. பல இடங்களிலிருந்து குறிப்பாக எனது உறவினர்கள் மத்தியில் பல எதிர்ப்புக்கள் வந்தது. கலியாணம் செய்யாத பெண்ணை கொண்டுபோய் எப்பிடி ஆண்களுடன் நடிக்கவிடுவது? என்று.அந்தவகையான கஸ்டமான அநுபவங்களைச் சந்தித்து இருக்கிறேன். முன்பு நாடகம் என்றாலே சமூகத்தில் அதற்கு அந்தஸ்து இருக்கவில்லை அதற்கு பல காரணங்கள் இருந்தன பொதுவாக நாடகம் என்றாலே ஆண்கள் நடித்தாலே அதை ஏற்றுக் கொள்வதில்லை அந்தஸ்து இல்லாதது கூத்தாடி என்று சொல்வதுடன் வேறு வேலை இல்லையோ உதைப்போய் செய்து கொண்டிருக்கிறியோ என்று மரியாதை இல்லாத நேரத்தில அப்ப சரியான எதிர்ப்புக்களை சந்திக்கு கூடியதாக இருந்தது என்னை நடிக்கவிடவேண்டாம் என பல அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருந்தனர். இந்த இடத்தில நான் ஒன்றைக் குறிப்பிட வேண்டும் என்னுடைய அப்பா அம்மா என்னுடைய ஆர்வம் என்னுடைய திறமை ஆகியவற்றிற்கு தடைபோடக்கூடாது என்ற அந்த நோக்கத்தில குறிப்பாக அம்மா. அம்மா பெரிதாக படித்தவவாக இல்லாவிட்டாலும் அவ ஒரு யாழ்ப்பாண பெண் அம்மா. நான் பிறந்தது யாழ்ப்பாணம் ஆனால் வளர்ந்தது கொழும்பு சாதாரண அம்மா அம்மா எனக்கு முழு ஒத்துழைப்பையும் தந்தவ. அவவுடைய முழுமையான ஒத்துழபைப்பும் ஆதரவும் எனக்கு பலத்தையும் உற்சாகத்தை தந்தது அம்மாவும் மற்றவர்களுடைய கதையைக் கேட்டுப் பயந்து பின்வாங்குபவராக இருக்கவில்லை.

நிறைய எதிர்ப்புக்கள் வந்தது. நான் இரண்டாவதாக செய்த மழை நாடகத்திற்கு கிடைத்தது.1978 இல் நான் நடித்த நாடகம் பலரால் ஏற்றுக் கொள்ள முடியாத நாடகம் அந்த நாடகத்தில் வருகிற பெண் பாத்திரம் சொல்கிறது ஒரு நேரத்தில எனக்கு ஒரு ஆம்பிளை தேவை ( ஐ நெநன ய அயெ) அது நீங்களாக கூட இருக்கலாம் என குடும்ப வைத்தியரைப் பார்த்துக் கேட்கிறது. மகள் ஒரு நடுத்தர வர்க்கப் பெண தாய் இல்லாம ' தகப்பனுடன் வளர்கிறாள் . நாங்கள் அந்த நாடகத்தை யாழ்ப்பாணத்தில மேடையேற்றிய போது இந்த வசனத்தை கூறும் போது பார்வையாளர்களிடமிருந்து சிரிப்பும் ஒரு ஆங் என்ற ஒலியும் தான் வந்தது ஏனென்றால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களுககு பார்வையாளர்கள் மத்தியில் ஒரு பெண் இவ்வாறான வசனங்களைப் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. பிறகு சபையில் ஒரு சலசலப்பு ஆனாலும் தொடர்ந்து நாங்கள் பல இடங்களில் மேடை ஏற்றியிருந்தோம். தனியாக யாழ்ப்பாணத்தில் என்றில்லாமல் வேறு வேறு இடங்களில் மேடையேற்றிய வேளைகளிலும் இந்தமாதிரியான வெளிப்பாடுகளை அவதானிக்க கூடியதாக இருந்தது.

**நீங்கள் நாடகங்களில் புது புதுவிதமான நுட்பங்களைக் கையாளுகின்றீர்கள் அது பற்றிக்கூறமுடியுமா ?**

நாடகத்துடன் சேர்ந்துதான் நுட்பம் .அதுவும் அந்தக் காட்சிக்குப் பொருத்தமானதா என கலந்துரையாடியே சேர்ப்போம் பலர் பலவிதமான விமர்சனங்களை முன்வைக்கின்றனர். தேவையில்லாத காட்சிகளில் பல புதிய நுட்பத்தை சேர்ப்பதாகவும் கூறுகின்றனர். நுட்பங்கள் நாடகத்துடன் ஒட்டிதானகவும் அமையவேண்டும். நாடகம் ஒரு கூட்டு முயற்சியாக இருப்பதால் நாங்கள் பாலேந்திராவுடன் இது பற்றி கலந்துரையாடுவோம் சில இடங்களில் காட்சிகளை எவ்வாறு அமைக்கலாம் பாத்திரத்தின் தன்மை எவ்வாறான நகர்வுகளை ஏற்படுத்தப் போகிறோம் என்பவற்றைக் கருத்தில் கொண்டு அவற்றை உருவாக்குவோம் பார்வையாளர்களை பிரமிக்க வைக்கவேண்டும் என்பதற்காக நாம் செய்வதில்லை. உதாரணமாக நீங்கள் பார்த்த பெயர்வு நாடக நிகழ்வில் மக்கள் நகர்வுகாட்சி உங்களுக்குத் தெரியும் எத்தனை ஆயிரம் மக்கள் இடம் பெயர்ந்தார்கள் என்று. இதனை சினிமாவில் காட்டலாம் ஆனால் மேடையில் காட்டமுடியாது. அதற்கு திரைக்குப் பின்னால் நிழல்களாக அவ்வளவு மக்கள் ஒரு காலுக்கு மேல் ஒரு கால் வைத்து எவ்வாறு போனார்கள் என்பதை நிழல்கள் மூலம் பார்க்கும் போது நிகழ்வு மனதில் பதிந்துவிடுவதுடன் அந்த நிகழ்ச்சியில் பலரை நாம் பயன்படுத்தவில்லை. இவ்வாறான காட்சிகளைத் தான் நான் குறிப்பிடுகிறேன். தேவையான இடத்தில் தேவையான நேரத்தில் அறிமுகம் செய்துள்ளோம்.

**இலங்கையைப் பொறுத்தவரையில் நாடகத்துறை மிகவும் பெறுமதியான ஒன்றாகக் கணிக்கப்படவில்லை. நீண்டகால உங்களுடைய கலைப்பயணத்தில் உங்களுக்கு கஷ்டமான அநுபவங்கள் மட்டும் தான் கிடைத்துள்ளதா அல்லது சந்தோசமான அநுபவங்களும் உங்களுக்கு கிடைத்துள்ளதா?**

ஆம் சந்தோசமான அநுபவங்களும் நிறைய கிடைத்துள்ளன. நாடகம் நடிப்பது வந்து பல விடயங்களை உள்ளடக்கியது.தனியாக நடிப்பது மட்டுமல்ல அது ஒரு கூட்டு முயற்சி நாடகத்தில் இசை வருகின்றது பயிற்சியில் ஈடுபடுவது கூட சந்தோசமான அநுபவமாக அமைகிறது .நாடகம் நடிக்கும் போது ஏனைய நிகழ்சிகள் போல் அல்லாமல் பார்வையாளருடனான நேரடித் தொடர்பு எங்களுக்கு கிடைக்-



கிறது. திரைப்படம் வானொலி நாடகம் போலல்லாமல் விமர்சனங்கள் எமக்கு நேரடியாகவே கிடைக்கிறது .மக்களின் எதிரொலிப்புக்களை நாம் நேரில் சந்திக்கிறோம். சந்தோசமாக இல்லாவிடில் தொடர்ந்து செய்வது கஷ்டமாக இருந்திருக்கும் இங்குள்ள .யந்திரமயமான வாழ்க்கையிலும் நாடகத் தயாரிப்பில் ஈடுபடும் போது உற்சாகமாக இருக்கின்றது.புதுப்புது அநுபவங்கள் ஒவ்வொரு நாடகமும் ஒவ்வொரு அநுபவமாக அமைகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆக்களை சந்தித்து கதைக்.கும் போது விமர்சனங்கள் கிடைக்கின்றது. அது எந்தவிதமான விமர்சனமாக இருந்தாலும் கூட நல்ல சந்தோசத்தை தருகின்றது.

**நீங்கள் இலங்கையிலும் நாடகங்களில் பங்குபற்றியுள்ளீர்கள் ஐரோப்பாவிலும் பங்கேற்றுள்ளீர்கள் பெண்களின் பங்களிப்பு எவ்வாறு அமைந்திருந்தது?**

பெண் பங்களிப்பு மிக குறைவு. முன்பு போல பெண் பாத்திரங்களுக்கு ஆண்கள் நடிக்கவில்லை என்ற மிக சிறிய மாற்றத்தைக்கு குறிப்பிடலாம் ஆனால் பெரிய மாற்றம் ஏற்பட்டதாக குறிப்பிட முடியாது. ஆனாலும் இப்போ பெண்கள் நடிப்பதற்கு முன்வருகின்றனர் .ஆனால் தொடர்ந்து நடிப்பதற்கு வருவதில்லை. உதாரணமாக இங்கு லண்டனில் நாடகங்கள் நடிப்பதற்கு 2,3 பெண்கள் வந்தார்கள் அவர்களால் தொடர்ந்து புதிய தயாரிப்புக்களில் ஈடுபடமுடியாமல் இருக்கிறது அதற்கு காரணம் குடும்ப சூழல் மற்றது சமூகம். குடும்பசூழலில் திருமணமான பெண்களுக்கு கணவன் கஷ்டம் கொடுத்துக் கொண்டு அல்லது நச்சரித்துக் கொண்டிருந்தால் அவர்களால் அங்கு வந்து சந்தோசமாக நன்றாகச் செயற்.பட முடியாது. மற்றது அவை யோசிக்கவேணும் அதோட அதற்கான தைரியம் வர வேணும்.அது பலருக்கு இல்லை. அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். முதல் செய்த நாடகம் என்றால் செய்யலாம் என்று சொல்லுவினம். பிரச்சனைகளுக்கு சமூகமும் தான் காரணம். நாங்கள் போறவழிக்கு ஒரு என்றொரு நாடகம் செய்திருந்திருந்தோம். ரோல் பின்றரின் நாடகம்.. அது சித்ரவதைமுகாமில் விசாரணை செய்கின்றனர். அதில் ஒரு குடும்பத்தை விசாரிக்கின்றனர்.பெண்ணை வைத்து விசாரிக்கின்றனர். அதில் விசாரிப்பவர் கேட்கின்றார் நீ எத்தனை தடவை பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறாய்? என அவர் கேட்கிறார் முதல் தடவை அதை மேடையேற்றும் போது நான் அதை நடிக்கவில்லை. ஆனால் அதில் நடித்தவர் மேடையை விட்டு இறங்கி வரும் போதே அவருக்குத் தெரிந்தவர்கள் அவரிடம் என்ன அந்தமாதிரி வசனங்கள் சொல்லி மேடையில நடிக்க உமக்கு வெட்கமாக இல்லையோ எனக் கேட்டார்கள் முதலில் அந்த பெண் அவற்றைப் பெரிது படுத்தவில்லை. இவ்வாறான விமர்சனத்தை முன்வைத்தது பெண்கள் தான் என்பதையும் நான் குறிப்பிட வேண்டும். பின்பு இரண்டாவது தடவை தான் செய்ய விரும்பவில்லை என்று அவர் கூறினார் சமூகமும் ஒரு காரணம். ஆனாலும் சின்ன சின்ன முயற்சிகள் நடக்கின்றன தொடர்ந்து தீவிரமாக நடிப்பது என்பது குறைவு. .இல்லாவிடில் தனிய பெண்கள் நடிக்கும் நாடகங்களில் பங்கு பற்றுகின்றனர். நாங்கள் ஆண்களுடன் சேர்ந்து நடிக்க மாட்டோம் தனிய நடிக்கின்றோம். அதுவும் நான் கருத்தைப் பற்றி சொல்லவரவில்லை.அது தீவிரமான நாடகமும் தேவை கருதி உதாரணமாக சங்கம் என்றால் அந்த சங்கத்தில் அங்கம் வகித்தால் அந்த சங்கத்தின் விழா என்றால் அங்கத்தவர்கள் சிலர் சேரந்து நடிக்கின்றார்கள். நான் போகும் இடங்களிலும் அவதானித்தேன் கனடாவில் எல்லாம் சமூகமாற்றத்திற்காக பெண்களின் பிரச்சனைகளை வெளிக் கொண்டுவருகின்ற அவ்வாறான நாடகங்கள் செய்யப்பட்டன ஆனாலும் அவர்களால் தொடர்ந்து இயங்க முடியவில்லை. அந்த குழுவிலும் தனிய பெண்கள் மாத்திரம் தான் அங்கம் வகித்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட வசதியீனங்கள் மற்றும் குடும்ப நிலைமைகள் .இவைகளாலும் அவர்களால் தொடர்ந்து இயங்க முடியாமல் போய்விட்டது எனச் சொன்னார்கள்.

**பெண்கள் அமைப்புக்கள் பெண்களின் உரிமை பற்றிய எழுச்சி என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் பெண்களை கலைஉலகத்திற்குள் பெருமளவில் நுழையவைக்கலாம் என்று கருதுகின்றீர்களா?**

ஆம் அதற்கு முதலில் நாடகம் சமூக அந்தஸ்து பெறவேண்டும். நாடகத்தை பலர் பார்த்தாலும் கூட பெண்கள் நடிக்க வருவதற்குஅதற்கு தீவிரமான நாடகங்கள செய்யவேண்டும். பார்வையாளர்களைக் குறை சொல்ல முடியாது.ஏனெனில் முன்பு நாடகம் என்ற போர்வையில் நகைச்சுவை இரட்டை அர்த்ததிலாவை போன்றவை நிகழ்தப்பட்டன. அதில் அழகுணர்ச்சி இல்லை. இவ்வாறான நாடகங்களில் நடிக்க ஏலாது. அதற்காக இப்படி தீவிரமான நாடகங்களில் இப்படி நாடகங்கள் இருக்கின்றன நல்ல வடிவு அமைப்பு விடயங்கள் இருக்கின்றது என்பதை தொடர்ந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்து கொண்டு வருவதன் மூலம் நாங்கள் நல்ல கருத்துக்களை செய்ய ஆதரவு கிடைக்கும் போது பெண்கள் வருவார்கள் என்று நம்புகிறோம்.அத்துடன் நல்ல பிரதிகளும் அவர்கள் பங்குபற்றுவதற்கு உந்துதலாக அமையலாம். நாம் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் வரவிட்டாலும் கூட நிறையவே பெண்கள் தங்கள் பங்களிப்புக்களை வழங்கி வருகின்றனர். புலம் பெயர்ந்த சூழலில் இப்போ நீங்கள் பத்திரிகைத்துறையில் ஈடுபட்டுள்ளீர்கள் தொகுப்புக்களை செய்துள்ளீர்கள் மற்ற நாடுகளில் வேறு விதமான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. எழுத்துறைக்கு பெண்கள் நிறைய வந்ததுபோல நாடகத்துறைக்கு வந்ததாக நாம் கூறமுடியாது.

**பெண்களின் அகஉணர்வுகளைச் சித்தரிக்கின்ற மழை கண்ணாடிவார்ப்புக்கள் போன்ற மிக அருமையான நாடகங்களை நான் பார்த்துள்ளேன் தொடர்ந்து இவ்வாறான நாடகங்களைச மேடையேற்றுவதாக இருக்கின்றீர்களா?**



ஆம் நாம் முதல் செய்திருக்கிறோம். துன்பக் கேணியில் அதாவது பெயர்வு போல கவிதா நாடக நிகழ்வு கவிதைகளைத் தொகுத்து நாடக நிகழ்வாக பெண்களின் பிரச்சனைகளைத் தொகுத்து அதைச் செய்திருந்தோம்.அது ஒரு கவிதா நாடக நிகழ்வு. .நாடக நிகழ்வு ஆரம்பமாகும் போதே அது சாமத்திய சடங்குடன் ஆரம்பமாகிறது அதிலிருந்து தொடங்கி என்னமாதிரி சடங்கை முடித்து அடக்கி வைப்பது எனக்காட்டுவதாக அமைந்திருந்தது. அதில் பெண்கவிஞர்களின் கவிதைகளைத் தொகுத்து அதை செய்திருந்தோம். அதில் சிவரமணி, ஔவை கவிதையும் மற்றும் பல கவிஞைகளின் கவிதைகளும் இடம் பெற்றன. அத்துடன் பெண்கள் சமூகத்தில் எவ்வாறு அடக்கப்படுகின்றனர் என்பதை சுட்டிக்காட்டுபவையாக அமைந்திருந்தது. அதில் ஒரு கவிதை அம்மா யன்னலை திறவுங்கள் (மைத்ரேயினுடையது) வெளிநாடுகளில் செய்திருக்கிறோமா என்பது ஞாபகம் இல்லை.

அம்பையின் ஆற்றைக்கடத்தல் என்ற தனி நடிப்பாக செய்யும் நாடகம் அது கதை அவர் கவிதை வடிவில் எழுதியுள்ளார்.அது பெண்விடுதலை பற்றியது. ஆற்றைக்கடத்தல் அதில் நான் தனியே நடித்திருத்தேன் அதில் பெயர்வு போல திரைக்குப்பின்னால் நிழல்களாக யார் அடக்குமுறையைப் பிரயோகிக்கின்றனர் என்பதை காட்டுவதாக அமைந்திந்தது நல்ல அழகான பிரதி. அதில் பலவற்றிற்கு இராமனை பற்றி வருகின்றது அந்த நாடகம் செய்யும் போது சமயபற்றுள்ளவர்கள் மற்றும் வயதானர்வர்களுக்கு அது முழுக்க முழுக்கு இராமரை விமர்சித்திருப்பதுடன் வசனங்கள் மிகவும் கூர்மையாக பளிச்சு பளிச்சு என்று வருகின்றன. தனியே இராமர் பற்றியில்லாமல் பாரதம் பற்றிய விமர்சனமும் வைக்கப்பட்டிருந்தது. பலர் பல விமர்சனங்களை முன்வைத்திருந்தார்கள் பலரால் அது ஏற்றுக் கொள்ள முடியாமல் இருந்தது. அந்த நாடகமும் 5-6 தடவைகள் செய்திருந்தோம்-

மழைக்குப் பிறகு 1977 ஆம் ஆண்டு தருமசிவகாந்தின் நட்சத்திரவாசி என்ற நாடகம் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் மேடை ஏறியது. சாதரணமாக எங்களுடைய சமூகத்தில் ஏற்றுக் கொள்ளமுடியாத பெண் பாத்திரம் அவவுக்கு தன்னுடைய கணவருடன் ஏற்பட்ட முரண்பாடு விருப்பம் இல்லாத ஒரு உறவில இருக்கத் தேவையில்ல என்ற பாத்திரம் மிகவும் காத்திரமான வசனங்கள் அந்த வசனங்கள அந்தக் காலத்தில பலருக்கு ஏற்றுக் கொள்ள முடியாததாக இருந்தது மற்றதுபாலைவீடு என்ற நாடகம். 1978 இல காசியாலோக்காவின் பாலைவீடு. என்ற நாடகம் அதுவும் கொழும்பு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேடையேற்றப்பட்டது. முழுக்க முழுக்க பெண்கள் நடித்தது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரி பழையமாணவிகளும் அவைக்காற்றுக் கழக நடிகைகளும் சேர்ந்து செய்தது.அந்த நாடகம் கூடுதலாக பழைய யாழபபாண கலாச்சாரம் என்ன மாதிரி வெளியில போகவிடாம



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடக்கி வைத்து தங்களுடைய தாய் தந்தை தெரிவு செய்யும் மாப்பிளையை பிள்ளைகள் கலியாணம் செய்ய வேணடும் என்ற எதிர்பார்ப்புடன் வீட்டுக்குள்ளேயே வைத்திருக்க அது எவ்வாறு வெடித்து வெளிவருகிறது என்பது பற்றி விளக்குவது.

**எவ்வளவு காலமாக இத்துறையில் ˙டுபட்டுள்ளீர்கள் ?**

1975 முதலாவது நாடகம் 25 வருடங்கள். தொடரந்து போகவேண்டும் என்பது எனது விருப்பம் நாம் தற்போது சிறுவர் நாடகங்களில் தமிழில் லண்டனில் செய்து வருகின்றோம் தற்போது பாலேந்திராவுடன் சேரந்து நெறி-யாள்கையிலும் ஈடுபட்டுவருகிறேன். சிறுவர் நாடகங்களில் ஆடல்பாடல் எல்லாம் சேர்ந்தது. பிள்ளைகள் புகலிடத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் ஆனால் அவர்கள் தமிழ் பிள்ளைகள். நாடகத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட ஈடுபாட்டால் அவர்கள் நாடகத்தில் கலந்து கொள்-கிறார்கள். நாங்கள் எடுத்த-வுடனே நாடகத்தை செய்-யாமல் முதல் நாடகப்பட்ட-றைகளைச் செய்வோம். அவர்களுடைய பங்களிப்-புக்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவோம். சில வேளைகளில் அவர்களிடம் நாங்கள் காட்சியைக் குறிப்பிட்டு நீங்களே இந்தக் காட்சியை செய்யுங்கள் என்று கொடுத்து குழுக் குழுக்களாக பிரித்து அவர்கள் செய்யும் காட்சிகளுக்கு நாம் சற்று மெருகு ஊட்டுகிறோம். நாடகத்திலுள்ள ஆர்வத்தினால் அதில் பங்கு பற்றிய ஒருவர் க. பொத. சாதாரணதர பரீட்சைக்கு நாடகத்தை ஒரு பாடமாக எடுத்துள்ளார். பின்பு பாடசாலையில் தொடர்ந்து ஈடுபட இருக்கிறார். அவருக்கு தமிழ் மொழியும் சரளமாக இருப்பதால் அவர் தயாரிப்பு வேலைகளில் ஈடுப-டுவதிலும் ஆர்வமாகவுள்ளார். எதிர்கால சந்தியில் இவ்வாறான விடயங்களில் ஈடுபடுவது மிகவும் நல்ல விடயம்.



**நாடகக் குழுவில் வேலை செய்யும் போது நீங்கள் பிரச்சனைகளை எதிர் நோக்கியதுண்டா?**

இந்த நாடகக் குழு சற்று வித்தியாசமானது என்று குறிப்பிடலாம். ஆண்கள் என்று சொல்லும்போது அவர்களுடைய பார்வையைப் பொறுத்தது. அவைக்காற்றுக் கழகத்தில் உள்ள ஆண்கள் சற்று வித்தியாசமானவர்கள் என்று சொல்லவேண்டும்.பரந்த பார்வையுள்ளவர்கள். இங்கு எல்லோரும் சமம் ஆண் என்பதற்காக பெரிது என்றோ பெண்கள் என்பதற்காக அவர்கள் குறைவு என்பதோ இல்லை இதனால் நாங்கள் நண்பர்களாக பழகுகிறோம் நான் வித்தியாசமாக உணரவில்லை. நாங்கள் மிகவும் மனம் திறந்த நண்பர்களாக இருக்கிறோம். நெருக்கமாக நட்புடன் பழகும் தன்மையும் ஏற்பட்டுள்ளது. திறந்த மனத்தடன் விவாதிப்போம் நாடக ஒத்திகைகள் மிகவும் சுவாரசியமாகவும் நட்பு ரீதியாகவும் இருக்கிறது. எல்லோரும் மிகவும் நெருக்க-மாக பழகுவோம். அத்துடன் சில காட்சிகள் நாங்கள் நெருக்கமாக நடிக்கவேண்டி ஏற்படுவதுண்டு. அந்த வேளையில் நாங்கள் வசசனங்களை கண்களுக்-குள் பார்த்து கூற வேண்டி வருவதுண்டு நெருக்கமான நட்புடன் பழகுவதான உணர்வு எங்களுக்கு இல்லாவிட்டால் மிகவும் கஷ்டமாக இருக்கும்.

பெயர்வு நாடகத்தில தாய் பிள்ளை பாலத்தில விழுந்திட்டுது என்று சொல்லி எல்லோரும் அவரை இழுக்கின்றனர். சிலர் சொல்வார்கள் தொட்டு நடிக்கக் கூடாது என்று எனக்கு அதில் உடன்பாடில்லை. தேவையானபோது தொட்டு நடிக்க வேண்டிய தேவையுள்ளது. நான் சொன்ன அந்தக்காட்சியில அவரை இழுக்காட்டி அது நாடகமில்லை. நாங்கள் நன்றாக பழகுவது ஒருவித குச்சமும் இல்லாமல் பழகுவது நடிப்பதற்கு இலகுவாக இருக்கின்றது. நாங்கள் வெவ்வேறு இடங்களுக்கு சென்று



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடகங்களைச் செய்து வருகின்றோம்.பல சந்தோசமான அநுபவங்கள் எமக்கு கிடைத்துள்ளன. எதிர்ப்புக்களும் இருக்கின்றன. தமிழ் அவைக்காற்றுக்கழகம் 20 வருடங்களுக்கு மேலாக இயங்கி வருகிறது.எல்லோரும் தொண்டர்களாகவேலை செய்பவர்கள் ஆர்வத்துடன் ஈடுபடுவது தான் காரணம்.சந்தோசமான அநுபவங்கள் கிடைக்காவிடில் செய்வது சிரமமாக இருந்திருக்கும். . லண்டனில் இயங்கக் காரணம் எங்களுடைய கூட்டு வேலை முழுநேரமாக வேலை செய்து கொண்டும் அடிக்கடி பல நாடகங்களை அரங்கேற்றுவது மிகவும் கஷ்டமாக இருந்தபோதிலும் நாம் தொடர்ந்து ஈடுபடுவது ஆர்வத்தின் காரணமாகத்தான். காசு கொடுத்து நடிக்க வருவது ஒரு இயந்திரமயமாக இருக்கும். அத்துடன் சந்தோசம் குறைவு.

5 நாளும் வேலை தமிழ் பாடசாலைக்கு ஞாயிற்றுக் கிழமைகளில் செல்வது இவைகளுக்கு மத்தியிலும் நாடகம். இதற்கு ஆர்வம் தான் காரணம்.

**உங்களைப் பற்றி எங்களுக்கு சற்று கூறமுடியுமா**

நான் முழுநேரமாக வேலை செய்கிறேன். அத்துடன் நாடக முயற்சிகளிலும் ஈடுபடுகிறேன். வானொலி அறிவிப்பாளர் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் பணிபுரிகிறேன். பரதநாட்டியத்தை இலங்கையில பயின்றனான். இங்கு சனி ஞாயிறுக்கிழமைகளில் இயங்கும் தமிழ் பாடசாலையில் பரதநாட்டிய ஆசிரியராக இருக்கிறேன். சமூகப்பிரச்சனைகளை பரத நாட்டியம் மூலம் வெளிக் கொணரும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளேன். காளி எழுந்தாள் என்ற சி. சிவசேகரத்தின்ர கவிதையை நாட்டிய நாடகமாக செய்திருந்தோம். கவிதையை தேயிலைத் தோட்டத்துப் பெண்களைக் கருத்திற் கொண்டு அவர்கள் எவ்வாறு அடக்கப்படுகின்றனர் என்பதைக் காட்டுவதாகவும் பிறகு காளியின் நர்த்தனம் மூலம் அவர்கள் ஆவேசம் ஏற்பட்டு அவர்கள் அடக்குமுறைக்கு எதிராக இணைந்து போராடுவதாக அமைகிறது.

மற்றது இலங்கையில் நடன நிகழ்ச்சிகள் செய்யும் போது நான் பாரதியாரின் பெண்விடுதலை பற்றிய பாடல்களை தொகுத்து ( அப்போது பாரதி நூற்றாண்டு நடந்து கொண்டிருந்தது ) இசையும் கொடுத்து பரத நாட்டிய வடிவில் 40 நிமிடங்களபரத நாட்டிய வடிவில் நடனநிகழ்ச்சி செய்திருந்தோம். சிலவரிகள் பெண்கள் தான் சமைச்சுக் கொண்டிருப்பது.

குடிச்சுப் போட்டு வந்து சாப்பாட்டை போடு என்பது

தட்டைத்தூக்கி எறிவது

இவைகளை நாம் அரங்கில் செய்திருந்தோம். எனக்கு கிராமிய நடனங்கள் மிகவும் விருப்பம் எனது மாணவர்களுக்கு பழக்கி மேடை யேற்றியுள்ளோம்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வானொலி நாடகம் விவரணங்கள் தயாரிப்பு நிகழ்ச்சிகளை செய்திருந்தேன். Sunrise வானொலிச் சேவையில்6 வருடங்களாக செய்தி தயாரிப்பு

மணிமுகங்கள் என்றொரு நிகழ்ச்சியை



தயாரித்து வந்தேன் அதில் ஈழத்துக் கலைஞர்களின் கலைப் படைப்புக்கள் எழுத்தாளர்களின் கதைகளை வாசிப்பது போன்றவை.

TBC செய்தி வாசிப்பாளர் மற்றும்மேடை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குவது

திருமணம் செய்ய முன்பு பல போராட்டங்கள் நிறைய எதிர்ப்புக்களும் இருந்தன.மிகுந்த போராட்டம் நிறைந்ததாக இருந்தது. தொடர்ந்து செய்யவேண்டும் என்ற ஆர்வமும் தெதுடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்கான தைரியமும் வேணும். குடும்பத்தில பரஸ்பர புரிந்துணர்வு ஒத்தாசையுடன் செய்யும் போது வெற்றியாக அமைகிறது.முடிவு செய்யும் உரிமை கருத்துக்களை ஏற்றுக் கொள்வது கலந்துரையாடுவதற்கும் ஆலோசனைகள் என்பவற்றிற்கும் உரிய சூழல் இருக்கிறது.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது பெண்கள் நாடகங்களைச் செய்கின்றார்கள் அதை சமூகம் ஏற்றுக் கொள்கிறது தற்போது ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

யாழ் நாடகஅரங்ககல்லூரி ஆரம்பிக்கும் போது அவர்கள் நாடகப்பட்டறையை ஆரம்பித்தார்கள். ஒரு பெண்களும் கலந்து கொள்ள முன்வரவில்லை. நான் கொழும்பில் கோடை நாடத் தயாரிப்புக்குளில் ஈடுபட்டிருந்த நேரம். இனக்கலவரம் ஏற்பட்டு யாழ்ப்பாணம் போன போது தாசிசியஸ் அவர்களும் குழந்தை சண்முகம் அவர்களும் வந்து நாடகப்பட்டறைக்கு வாங்கோ உங்களுக்கு நாடகம் நடித்த அநுபவம் இருக்கிறது.நீங்கள் வந்தால் யாழ்பல்பலைக்கழத்திலிருந்து சில பேர்கள் வருவார்கள் என்று சொன்னார்கள் ஆரம்பத்தில் நாங்கள் 15 பெண்கள் இருந்தோம் ஒரு வருடம் நாடகப்பட்டறை தொடர்ந்து நடாத்தப்பட்டது. இருவர் மட்டுமே மிஞ்சியிருந்தோம். முடிவில் கோடை நாடகம் தயாரித்தார்கள்.

நாடகப்பட்டறை நிகழ்ந்த இடம் திண்ணைவேலி சந்தியில இந்து மன்றக் கட்டிடத்தில.அதில நிறைய யன்னல்கள் சந்தைக்கு வருவோர் போவோர் எல்லாம் பார்த்துச் செல்வார்கள் பட்டறைக்கு வந்த பல பெண்களுக்கு இது கஷ்டமாக இருந்தது. என்ன உங்க எல்லாரும் கூத்து.. என்று ஆக்கள் கதைப்பினம்... பல்கலைக்கழகம் சென்றபின்பும் கூட இவர்களால இந்த சூழலில நின்று பிடிக்க முடியவில்லை.பெரிய மாற்றம் வரவேண்டும். பல்கலைக்கழக நாடகங்களில நடிக்க பிரச்சனையில்லை ஆனா வெளியில நாடக கழகங்களில நடிக்கிறதுக்கு தைரியம் இல்லை. ஏனைய துறைகளுடன் ஒப்பிடும் போது நாடகத்துறைக்கு பெண்கள் வந்தது குறைவு. இதற்கு வருமானம் ஒரு காரணமாக இருக்கலாம்.நாட்டியம் இசை மேடைநிகழ்ச்சிகளை வழங்க குடும்பம் ஒத்துழைப்பு வழங்குகிறது நாடகம் என்று பார்க்கும் போது வித்தியாசமாக பார்க்கப்படுகிறது. நடனம் கற்பித்தல் நிகழ்ச்சிகளை செய்வதற்கு வருவாய் உண்டு விருப்பம் இல்லாவிட்டாலும். சின்ன ஒத்துழைப்பு வழங்கப்படவதுண்டு.

**நீங்கள் சக்தி வாசகர்களுக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?**

நான் சக்தி சில சஞ்சிகைகள் பார்த்திருக்கிறேன். மற்றது அண்மையில் வெளிவந்த சிறுகதைத் தொகுதி பார்த்தேன் அது நன்றாக இருக்கிறது. அதிலுள்ள எல்லாக் கதைகளையும் வாசிக்கவில்லை 5,6 கதைகளை நான் வந்தவுடன் வாசித்தேன் அது ஒரு நல்ல முயற்சி சில கதைகள் மிகவும் தரமாக இருந்தன கதைகளில் பார்க்கும் போது நாம் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எமது மனஆதங்கங்கள் மற்றது இதற்கான மாற்றங்கள் என்பதற்கான கருத்துக்கள் என்பன வெளிவந்திருந்தன. நல்ல முயற்சி தொடர்ந்து செய்யவேண்டும். தனியாகப் பெண்களின் சிறுகதை எனத் தொகுத்து வெளியிடுவது ஐரோப்பாவில் இதுதான் முதற்தடவை என நினைக்கிறேன். நல்ல முயற்சி சக்தியும் பல நல்ல விடயங்களைத் தருகின்றது நான் நினைக்கிறேன் அது என்னைப் பொறுத்தவரையில் எல்லா மொழிகளிலும் இருக்கின்ற நல்ல விடயங்களை வாசிப்பதற்கு எங்களுக்கு மொழியறிவுதேவை. அத்தடன் தேடி எடுதது வாசிக்க இயலாமல் இருக்கும் வெவ்வேறு நாடுகளிலுள்ள பெண்ணிலைவாதிகளைப் பற்றி பெண் எழுத்தாளர்களைப் பற்றி கலைஞர்கள் மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் போன்றவற்றை வாசிக்க வாய்ப்பு கிடைக்கிறது. தொடரந்து வெளிவரவேண்டும் பெண்கள் சந்திப்பு போன்றவற்றை நிகழ்த்தவேண்டும. இவைகளுடன் நாடக முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும் அதாவது பெரியஅளவில் செய்யவேண்டும் என்றில்லை. சிறிய அளவில் முயற்சிகளில் ஈடுபடலாம் நேரடியாக போய் நாடகங்களை நிகழ்த்தவதன் மூலம் பல விடயங்களைச் செய்யலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நிருபா

# மறுப்பு அறிக்கை

ஆண்டாண்டுகாலங்களாக
அடங்கிக்கிடந்த நம்
உணர்வுகளுக்கும்
உரிமைகளுக்கும்
இதுவரை
இழந்துபோனவைகளுக்கும்
சமர்ப்பணம்

"இவையளுக்குச் சும்மா வச்சுக்கொண்டிருக்கேலாமல் வெளிக்கிட்டிட்டினம். பெண்விடுதலையெண்டு பூச்சாண்டியா காட்டினம்?"

"பெண்டுகளுக்கு என்னவேண்டிக்கிடக்கு விடுதலை? இவயளுக்குச் சுதந்திரம் குடுத்தா பிறகு எங்கடபாடு என்னவாகிறது?"

"உதெல்லாம் வெள்ளக்காரியளுக்குத்தான் சரி. எங்கட பொம்பிளயளெண்டால் பொட்டுவச்சு, சாறியுடுத்து அம்சமா இருக்கவேணும்."

பெண்விடுதலை பெண்விடுதலை எண்டுபோட்டு இவயள் ஏன் வெளிக்கிட்டுத்திரியினம் தெரியுமே? கண்டபடி ஆம்பிளயளோட படுக்கத்தான்."

எங்கள் மீதான அடக்குமுறை, பாகுபாடு நாங்கள் சிறுமிகளாகவிருக்கும்போதே ஆரம்பமாகிறது.

உணவில், உடையில், விளையாட்டில், எங்கள்மீது செலுத்தப்படும் அன்பில், கல்வி கற்பதில், பின் கலியாணத்தில், கணவனுடனான வாழ்வில், காதலில், காமத்தில், கழுத்தில், களத்தில், மேலும் கடையில், தெருக்களில், வேலையில், தொடர்ந்து விடுதலைப் போராட்டங்களில், அரசியல் அமைப்புகளில், மதத்தில், மடத்தில், மலைகளில், படத்தில், இலக்கியத்தில், அடுப்படியில், விண்வெளியில், வீரத்தில், வாதத்தில்.

மேலும் மேலும் சொல்லமுடியாத சோகங்களைப்போல், எண்ணமுடியாத அணுக்களைப்போல், கொல்லமுடியாத வைரசுக்களைப்போல்—

எம்மீதான அடக்குமுறை சொல்லமுடியாத சோகங்களைப் போல். ஆம் வார்த்தைகளால் சொல்ல முடியாத சோகங்களைப்போல்!

*பெண்விடுதலை என்பது சிலருக்கு பந்துபோல் ஊதி வெடிக்கவைக்க முயல்கின்றனர் எறிந்து விளையாடுகிறார்கள்.*

*தட்டிப் பார்த்து தமாசுசெய்கின்றனர் பின்னால் குத்தி பிய்த்தெடுக்கப் பார்க்கின்றனர்.*

கருத்தியலாக, கருங்கல்லைப்போல் மட்டுமல்லாமல் இலைகளாகத் தளிர்த்து, செடிகளாக செழித்து, படர்ந்து, தென்னைமரம்போல் நிமிர்ந்து, சில இடங்களில் செம்பட்டை தரித்து நிற்கிறது ஆதிக்கம்!

*பள்ளங்களாக மலைகளாக கடல்களாக— மட்டுமல்ல கவிதையாக, இலட்சியமாக, பின் நவீனத்துவமாக,*



*மாட்டுவண்டியிலும், விமானத்திலும், மின் அஞ்சலிலும்*

கருத்தியலாக மட்டுமன்றி கடமையுணர்வு கொண்டதாகவும் பாசம்மிக்கதாகவும், நியாயப்படுத்துவதாகவும், உறுதியாகவும் தன் நிலையை ஆண்கருத்தியலைச் சார்ந்தும் எங்கள் சிலரினது சம்மதத்துடனும் சங்கமித்திருக்கிறது. ஆண்களினதும், ஏன் எங்களினது தலைகளுக்குள்ளும் கைவிரல்களுக்குள்ளும், மயிர்களுக்குள்ளும், இரத்தத்திலும், இடுப்புகளிலும். எங்கும் எங்கும்.

ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலான அசமத்துவம் எண்ணமுடியாத அணுக்களைப்போல். ஆம் எண்ணமுடியாத அணுக்களைப்போலவே!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தக் கவலையுமின்றி, கரைச்சலுமின்றி காற்சட்டை அணிகிறது, தத்துவங்களை உருவாக்குகிறது, அவற்றைத் தனதாக்கியும்கொள்கிறது, தலைமைதாங்குகிறது, கோட்டைகளைக்கட்டுகிறது, கோடீஸ்வரர்களும் ஆகிவிடுகிறது., கதவுகளைச் செய்கிறது, சுவர்களையும் கட்டுகிறது, காடுகளையும் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது போதாதென்று காசுவாங்கியும் கலியாணம் செய்கிறது.

*பணத்தையும் வளங்கி, பத்தினியாய்ப்போனாள் சகி*

*வாழ்நாள் முழுவதுமே வேலைக்காரியானாள் படித்து*
*முடிக்கமுடியாமல் எம்தோழி பாதியில் நிறுதப்படுகிறாள்*

*பலர் முன்னிலையில் எம்சகோதரி*
*பலாத்காரப்படுத்தப்படுகிறாள்*

*விடுதலைக்கு வீரமுடன் சென்ற எம் தோழி*

*விறகுபொறுக்க அனுப்பப்பட்டாள்*

*விலைமாதாய் எம் சகோதரி*

*தன்னையே விற்க நிர்ப்பந்திக்கப்படுகிறாள்*

*அம்மாக்கள் அழுதார்கள்*

*அடிவாங்கி அடிவாங்கி*

*அங்கேயே இருந்தார்கள் அவர்களுடன்*

*நாங்களும்தான்*

எங்கள் மீதான அடக்குமுறைகள் கொல்லமுடியாத வைரசுக்களைப்போல்!

ஆம்! கொல்லமுடியாத வைரசுக்களைப்போல்!

ஏன்_ஏன்_ஏன்_??????

மார்படைக்க அழுது, மண்டைகளைப் போட்டுடைத்து,
மன்னிக்கமுடியாதென்றுணர்ந்து,
மறுக்கப்படவேண்டியதென்று

விளங்கி

எழுந்தோம்

எழுகிறோம்

இன்னும் இன்னும்

எழுவோம்.

இல்லை.

இல்லை.

ஆம், இவைகளை இல்லை என்றாக்குவது எப்படி?

நீட்டிநிமிர்ந்து கொட்டாவிவிடுகிறது. செமிபடமுடியாமல் துள்ளிக் குதிக்கிறது. நித்திரைசெய்கிறது. நரியாய் இருந்து பந்தைத்தட்டிவிடுகிறது. யானையாய் மிதிக்கப்பார்க்கிறது. புலியாய்ச் சீறிப்பாய்கிறது.

இங்கும் எங்கும் எதிலும்.

ஆம்! எமது போராட்டம் மிகவும் சிரமமானது.

பெரும் வெள்ளப்பெருக்கையும், சூறாவளியையும், குண்டுத்தாக்குதல்களையும் முகங்கொண்டு உயிர்வாழ்கிறோம். இன்னமும் இன்னமும் உரிமைகளுக்காக!

செருப்பாய் வந்து காலைக்கடிக்கிறது, மழையாய், பனிக்கட்டி மழையாய் பெய்து உடலை நோகவைக்கிறது. காற்றாய் வந்து அள்ளிச் செல்லப்பார்க்கிறது. பனியாய் விறைத்துவிட முயல்கிறது.

தாயகத்திலும் மலையகத்திலும் புகலிடத்திலும் அகதிமுகாம்களிலும் வெள்ளைத்தலைகளுக்குள்ளும் பரீஸ் தெருக்களிலும் இங்கும் எங்கும் எதிலும்

இல்லை

இல்லை

இல்லை என்றாக்க எழுந்தோம் எழுகிறோம் எழுவோம்

எமது போராட்டம் மிகவும் உறுதியானது!
அதனாற்தானோ பல இடையூறுகளைக் கொண்டது?

எப்படி? எப்படி? இரண்டினையும் சமப்படுத்துவது?

சம்மதத்திலோ சங்கமத்திலோ சங்கம் அமைப்பதிலோ சரிபாதி?

இனிவரும் சரித்திரத்தில் சரிபாதி!

ஒற்றைப் பாதையில் ஓடி, கடலில் அலைகளோடுமோதி பஞ்சுப் பனியாய்ப்பெய்து பாறைகளை உருக்கமுயன்று, அகப்பைகளால் அடித்துப்பார்த்து, எழுத்துக்களால் எடுத்துக்காட்டி—

எமது போராட்டம் கடுமையானது அதனால்த்தானோ நீண்டது?

எமது போராட்டம் நிஜமானது. நிம்மதிக்கானது. நியாயமானது.

வைரசுக்களைப்போல் கொல்லமுடியாத வைரசுக்களைப்போல், அணுக்களைப்போல் எண்ண முடியாத அணுக்களைப்போல், சோகங்களைப்போல் வார்த்தைகளால் சொல்லமுடியாத சோகங்களைப்போல்—

தோழர், நான் அவா நல்லாச் சோசலாப் பழகிறவ எண்டதுக்காண்டித்தான் அப்பிடிக் கேட்டனான். படுக்கிறதென்றால் இந்தப் பொம்பிளையளும் மற்றச் சாதாரண பொம்பிளையள்மாதிரிப் பயப்பிடினம்? என்னதான் பெண்விடுதலை, கிடுதலை எண்டு கதைச்சாலும் கற்பு கிற்பெண்டு ஒரு வட்டத்துக்குள்ளதான் இருக்கினம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்கள் உங்களுக்கு எப்பவும் விடுதலை தரத்தான் தயாரா இருக்கிறம். நீங்களும் அதுக்கேற்றமாதிரி உங்கள மாத்தவேனும். என்ர மனிசீற்ர எப்பவும் நான் ஒரு பெமினிஸ்ராத்தான் நடந்துகொள்ளிறன்

நீர் ஒரு பெமினிஸ்ற் என்று நினைச்சன். இவ்வளவு பிற்போக்குவாதியா இருப்பீரென்று நினைக்கவேயில்ல.

சும்மா தொட்டுத் தொட்டுக் கதைக்கவே பிடிக்காதமாதிரி விலகிப்போறீர். பிறகென்னெண்டு விடுதலையடையப் போறீர?

# ஒரு அறிவித்தல்!

## ஆயிரம் பெண்களின் அணிவகுப்பு

ஆண்டாண்டு காலமாக அடைபட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்த நாங்கள் எமது உரிமைகளுக்காகவும் விடுதலைக்காகவும் மிகவும் கடினமான ஒரு போராட்டத்தினை இதுவரைகாலமாகவும் நடத்திவருகிறோம். எமது போராட்டத்தின் தேவை எம்மால் உணரப்பட்டு பல ஆண்டுகள் ஓடிவிட்டன ஆனாலும் எமது விடுதலையை நாம் அடைந்து விடவில்லை. இதற்கு எம் தரப்பிலும் காரணங்கள் இருந்தபோதிலும் ஆணாதிக்கம் என்பது தனது அடக்கமுறையிலிருந்து தூக்கியெறியப்படாமல் இருப்பதற்கு (தன் சுயநலத்தை, சுரண்டலை) தனக்குத் முடிந்தவரையில் தக்கவைப்பதற்கான வழிமுறைகளைக் கடைப்பிடித்துவருவதுவும் ஒரு முக்கிய காரணமாகும். இதற்கு எமது சுரண்டல் சமூக அமைப்புமுறையும் பலத்த ஆதரவளித்தவருகிறது.

## பெண்ணிலைவாதம் என்பது மேற்கத்தேய கோட்பாடு

பெண்விடுதலை என்ற பெயரில் எமது கலாச்சாரத்தை, பண்பாட்டை குலைக்கின்றனர், இது மேற்கத்தேயக் கோட்பாடு எமக்குச் சரிவராதது என்று எமது விடுதலைக்கு எதிராக எமது சமுதாய அடைக்குமுறை ஆனாதிக்கவாதிகளினால் பல ஆண்டுகாலமாகவே எம்மீது சுமத்தப்பட்டுவரும் பழிதான். குடும்பத்தைக் குலைப்பவர்கள், ஆட்டக்காரிகள், அடங்காப்பிடாரிகள், வாய்காரிகள், என்று நாம் எமது உரிமைகளுக்காகவும் ஆண்பெண் சமத்துவத்திற்காகவும் போராடத்தொடங்கிய காலங்களிலிருந்தே இப்படிப்பட்ட தப்பபிப்பிராயங்களையும் அவதூறுகளையும் தாங்கிப் போராடி வருகிறோம். இந்தவேளையில் எமது போராட்டத்தைத் திசைதிருப்ப இன்னுமொரு கூட்டம் புறப்பட்டிருக்கிறது என்பதனையும் மிகவும் வேதனையுடன் விளங்கிக்கொண்டுள்ளோம். இங்குதான் நாம் மிகவும் எச்சரிக்கையாகவிருக்க வேண்டும்.

## பின்நவீனத்துவம் என்பது இன்றைய வழிபாடு

பெண் விடுதலை என்றால் அது பாலியல் விடுதலை மட்டும்தான் என்று தமக்குச் சுயநலமான கருத்தியலொன்றை உருவாக்கி வைத்துக்கொண்டு புகலிடத்து முற்போக்கு, புரட்சிகர எழுத்தாளர்களாகத் தம்மைக் காட்டிக்கொள்ளும் சில இலக்கியக்காரர்களின் போக்கு ஏற்கனவே பலசிக்கல்கள், எதிர்ப்புக்கள் நிறைந்த எமது போராட்டத்தினை திசைதிருப்பிட முயல்கிற போக்காகும். (அப்போதுதான் இவர்கள் மேலும் பல நூற்றாண்டுகள் என்மைப் பாலியல் அடிமைகளாக வைத்திருந்து அனுபவிக்கமுடியும்) விரதம் அனுஸ்டிப்பதாக வெளியில் கூறிக்கொண்டு வயிறுமுட்ட உண்பதுபோல் எமது விடுதலையைத் தாம் வென்றெடுத்துத் தந்துவிடப்போவதாக (பாலியலில்கூட எமது முடிவுகளை எதிர்பார்க்காதவர்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாம் யாருடன் எப்போது எவ்வாறு ஒன்றிணையவேண்டும் என்பதைனையும் தாங்களே தீர்மானிக்கவிரும்புபவர்கள்) கதைகளெழுதி, கவிதைகள் படைத்து எமது போராட்டத்தினைக் கொச்சைப்படுத்துகிறார்கள். இதற்குப் பின்நவீனத்துவம் என்றும் பெயரிட்டுள்ளனர். இப்படிப்பட்ட போக்குகளை நாம் சமூகப் பொறுப்பற்ற செயலாகவும், ஆணாதிக்கத்தின் இன்னுமொரு வெளிப்பாடாகவே கருதுகிறோம்.

எமது விடுதலைக்கு எதிரான எந்தவொரு தத்துவத்தினையும் எதிர்ப்போம்!

எமது போராட்டத்திற்குத் தடையாகவிருக்கும் அனைத்தையும் தூக்கியெறிவோம்!

எமது சுதந்திரத்தைக் கொச்சைப்படுத்தும் எழுத்துக்களை நிராகரிப்போம்!

எமது போராட்டத்தினை பிழையாகக் காட்டமுனையும் பித்தலாட்டத்தனங்களை வெளிச்சத்திற்குக் கொண்டுவருவோம்!

இன்று நாங்கள் ஆயிரம் பெண்களாக இந்த வலை அணிவகுப்பை ஆரம்பித்துவைக்கிறோம். எமது விடுதலையில் உண்மையான அக்கறைகொண்ட எவரும் இதில் கலந்துகொள்ளலாம்.

உங்களது கருத்துக்களை, எதிர்ப்புக்களை, நிராகரிப்புகளை சிறு துண்டுப்பிரசுரங்களாகவோ அல்லது வேறு வடிவங்களாகவோ தயாரித்து வளங்குங்கள்.

ஆரம்பமாகும் காலம்—00.00. 2000
நேரம் — 12.37 மணி 15 செக்கன்,
22.00 மணி, ஒவ்வொரு நிமிடமும்
இடம்—லாச்சப்பல் பிறான்ஸ்

சிங்கப்பூர்
இனுவில் அ.மி.த.க. பாடசாலைக்குப் பின் வளவு
கார்ல் மார்ஸ் வீதி ஜேர்மனி,
புத்தளம்
மோசம்பிக்
சக்தி சஞ்சிகை

இந்த அறிவித்தல் கீழ்க்காணும் அனைத்துச் சஞ்சிகைகளுக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புகலிடத்தில் வெளியாகும் அனைத்துச் சஞ்சிகைகளுக்கும், பத்திரிகைகளுக்கும் (குறிப்பாக எக்ஸில், உயிர் நிழல்)

காலக்குறி, காலச்சுவடு, நிறப்பிரிகை, புதிய ஜயனாயகம், புதிய கலாச்சாரம், சரிநிகர், தமிழீழம், தேசபக்தன்

வீரகேசரி, தினமுரசு, தினக்குரல்,

அனைத்துத் தமிழ்ப் பெண்கள் அமைப்புகள் (சுதந்திரப்பறவைகள் உட்பட)

தொடர்புகளுக்கு—

ஆயிரம் பெண்களின் அணிவகுப்பு

தொலைபேசி —003349 418 130654265908

மின்அஞ்சல் - anivahuppu@gmx.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

EAST IS EAST



# மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி... இரு கோணங்களின் தரிசனம்

உமா (ஜேர்மன்)

ஒரு படத்தைப் பார்த்துவிட்டு வாய்விட்டுச் சிரிக்கலாம், பார்த்த மாத்திரத்திலேயே மறந்தும் விடலாம், விம்மி விம்மி அழலாம், சிந்திக்கலாம், படிப்பினையாக எடுக்கலாம்.

நாம் எத்தனையோ திரைப்படங்களைப் பார்க்கிறோம். எத்தனைப் படங்கள் எம்மனதில் பதிந்துவிடுகின்றன? அல்லது அதைக் பற்றி மேலும் ஆழமாக ஆராய்ந்து பல்வேறு கோணங்களில்த் தரிசிக்கத் தோன்றுகின்றன?

இந்தவகையில் அன்மையில் வெளிவந்திருக்கும் " East is East" - கிழக்கு கிழக்கு தான் என்ற Damien O'Donnell இயக்கியுள்ள ஆங்கிலத் திரைப்படத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். இப்படத்தின் மூலக்கதையை Ajub Khan-Din எழுதியுள்ளார். இப்படத்தில் இந்தியாவின் பிரபல நடிகரான ஓம் பூரி முக்கிய வேடத்தில் நடித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இனிக்கதையைப் பார்ப்போம். இக்கதை 1971ம் ஆண்டு இங்கிலாந்திலுள்ள மன்செஸ்டர் நகரில் நிகழ்கிறது.

25 ஆண்டுகளுக்கு முன்பாகப் பாகிஸ்தானிலிருந்து இங்கிலாந்திற்குப் புலம்பெயரும் இஸ்லாமியரான George Khan ( Ohm Puri) , Ella ( Linda Bassett) என்ற ஆங்கிலப் பெண்ணை இரண்டாம் தாரமாக மணம் முடித்து ஏழு குழந்தைகளுடன் ஒரு Fish& Chips கடையின் பெருமைமிக்க உரிமையாளராக வாழ்ந்துவருகிறார். ஒரு - நல்ல இஸ்லாமியத் தந்தையாக வாழ்வதாக நினைத்து தான் கிழித்த கோட்டுக்குள் தனது மனைவியும் பிள்ளைகளும் வாழவேண்டுமென ஒற்றைக்காலில் நிற்கும் ஜோர்ஜுடன் இங்கிலாந்திலேயே பிறந்து இரண்டாம் தலைமுறையினராக வாழும். இவரது பிள்ளைகள் முரண்படுகின்றனர். கணவனின் மனம் கோணமல் நடக்க முற்பட்டு அதேசமயம் பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளை நிறைவேற்றத் துடிக்கும் தாயாக எலா தவிக்கிறாள். பிள்ளைகளும் இஸ்லாமிய கலாசாரத்திற்குள் மதக்கட்டுப்பாட்டுடன் வாழவேண்டுமென விரும்பும் ஜோர்ஜ் பிள்ளைகளின் ஒவ்வொரு நடிவடிக்கையையும் காராராகக் கண்டிக்கிறார். பிள்ளைகளுக்குத் தனது விருப்பப்படியே அவர்களின் சம்மதமின்றித் திருமணங்களை ஒழுங்கு செய்ய முனைகிறார். தொடர்ந்து தோல்வியையேத் தழுவுகிறார். மூத்த மகன் திருமணத்தின் போது தனக்கு அதில் உடன்பாடில்லை எனக் கூறி மணமேடையை விட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓடுகிறான். அவரைக் குடும்பத்திலிருந்துத் தலைமுழுகிவிட்டு, அடுத்த இரு மகன்களுக்கும் அதே பாணியில் அவர்களின் சம்மதத்தைக் கேட்காமலேயே ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரு சகோதரிகளுகளை நிட்சயம் செய்கிறார். அதுவும் பாதியில் குழம்புகிறது. இவ்வொவ்வொருத் தோல்வியும் -குடும்பத் தலைவனாகத்- தன்னை நிர்ணயித்து குடும்பத்தின் முழுமையான வீட்டோ பவரை (Veto power) தனது கையில் வைத்திருக்கும் ஆணாதிக்கத்ததின் மொத்த உருவமான அவர் தலையின் மேல் சம்மட்டி அடிகளாக விழுகின்றன. அடிக்கடி பாகிஸ்தானியர்கள் கூடுதலாக வாழும் Breadford க்கு தனது குடும்பத்தை அழைத்துச் சென்று வாழத் தவறியமைக்காக மனம் நோகிறார்.

ஒருபுறம் தனது கலாசாரம் என்ற வட்டத்திற்குள் தனது பிள்ளைகளை வளர்க்க விரும்பி, அந்தக் கனவு சுக்குநூறாக அவர்முன் நொறுங்குவதைக் கண்டு கலங்கும் ஒரு தந்தையையும், மறுபுறம் இரு கலாசாரங்களுக்குள் சிக்கித் தாம் வாழும் மேற்குலக கலாசாரத்தை மேண்மையாக நினைத்து தந்தையின் உலகிற்குள் நுழைய மறுக்கும் பிள்ளைகளையும், இவ்விருவருக்கும் நடுவில் சிக்கித் தவிக்கும் தாயையும் தன்னகத்தே கொண்டு நகர்கிறது இத்திரைக்கதை. ஒரு சிரியஸான குடும்பக்கதையையாக எடுப்பதைத் தவிர்த்து ஒரு நகைச்சுவை கலந்த குடும்பச்சித்திரமாக எமக்குத் தந்திருக்கிறார் இயக்குனர் டாமியான் ஓ டோனேல்.

இக்கதையை இரு கோணங்களிலிருந்து தரிசிக்கலாம்.

ஜோர் கானின் பாகிஸ்தானைச் சேர்ந்த தந்தைப் பாத்திரத்தை அப்படியே ஒரு புலம்பெயர்ந்து வாழும் இலங்கையைச் சேர்ந்த தந்தையுடன் இடம் மாற்றிக்கொள்ளலாம். இத்திரைப்படத்தில் படமாக்கப்பட்டிருக்கும் பல காட்சிகள் எம் வாழ்வுடன் ஒன்றிப் போயுள்ளவையாக எம்மால் உணரமுடிகிறது. புகலிடத்தில் வாழும் ஒரு கிழக்கைச் சேர்ந்த தந்தையின் ஏக்கங்கள், அச்சங்கள், கோபங்கள், எதிர்பார்ப்புகள் யாவும் இங்கு மிகவும் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.



தான் பாகிஸ்தானில் வாழ்ந்த வாழ்க்கையை தன் பிள்ளைகள் மீதும் தன் மனைவி மீதும் திணிக்க முற்படுகிறார். தானே அக்குடும்பத்தின் தலைவனென்றும், தான் வைத்தது தான் சட்டம் என்பதே அவர் நியதி. நான் உங்களது தந்தை நான் சொன்னதைத் தான் நீங்கள் கேட்கவேண்டும் எனப் பிள்ளைகளிடமும், நான் உனது கணவன் நான் சொன்னதைத் தான் நீ கேட்கவேண்டும் எனத் தன் மனைவியிடமும் அடிக்கடிச் சொல்லிக் கொள்கிறார்.

ஒரு காட்சியில் ஒரு மகன் தனக்குப் பேசப்பட்ட திருமணத்தில் தனக்கு உடன்பாடில்லையென தந்தையிடம் தெரிவிக்கிறான். அதற்கு அவரோ எனக்கு நான் செய்வது என்னவென்று தெரியும், நான் உங்களது நன்மைக்காகத் தான் செய்கிறேன். நீ என்ன ஆங்கிலப் பெண்ணைத் திருமணம் செய்து அழியப் போகிறாயா? அவர்கள் சோம்பேறிகள், பொறுமையற்றவர்கள், வேறு ஆண்களுடன் செல்பவர்கள் என அடிக்கிக் கொண்டே போகிறார். அதற்கு அவரது மகன் ஆங்கிலப் பெண்கள் அவ்வளவு கூடாதென்றால் நீங்கள் ஏன் அம்மாவைக் கல்யாணம் செய்தீர்கள் எனச் சட்டென்றுக் கேட்டுவிடுகிறார்.

பிறரின் பதில்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் தான் மட்டுமே கேள்விகள் கேட்கப் பழக்கப்பட்டவர் அதிர்கிறார்.

அவன் இறுதியாக நான் உங்களது விருப்பப்படியே ஒரு பாகிஸ்தானியப் பெண்ணைத் திருமணம் செய்கிறேன் ஆனால் அதன் பின்பு என் தந்தையைப் போலவே ஒரு ஆங்கிலப் பெண்ணையும் கல்யாணம் செய்வேன் எனக் கூறிவிட்டுச் செல்கிறான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன் வாழ்க்கையைத் தான் கணவனிற்கும் பிள்ளைகளுக்கும் அர்ப்பணித்திருக்கும் தாயாக வரும் எலா பிள்ளைகளின் விருப்பத்திற்கு மாறாக அவள் கணவன் செய்யும் அட்டுழியங்களைச் சிலசமயங்களில் தட்டிக்கேட்க முற்படுகிறாள். நீ ஒரு நல்ல முஸ்லிம் மனைவியாக இருக்கப் பார் என அவளுடன் சண்டை போடுவதுடன் கடுமையாகத் தாக்கவும்படுகிறாள். ஆனால் எல்லாம் முடிந்த பின் கணவனிடம் சென்று வாஞ்சையுடன் தலையைத் தடவி தேநீர் குடிக்கப் போகிறாயா எனக் கேட்பாள்.

இரு கலாசாரங்களுக்குள் சிக்கித் தவிக்கும் குழந்தைகளின் மனோவியல் தான் இப்படத்தின் ஆதாரம். தாம் வாழும் சமூகத்தின் பழக்கவழக்கங்களை இவர்கள் மேன்மையானதாகக் கருதுகிறார்கள். அதற்குள் ஒன்றிப் போகவே அவர்கள் விரும்புகிறார்கள். அதைக் கட்டுப்படுத்தும் தந்தையுடன் சேர்த்து அவரது மதம், கலாசாரம் என்பவற்றையும் அவர்கள் எதிர்க்கிறார்கள். ஒரு ஆங்கிலப் பெண்ணோ ஆணோ எவ்வாறு ஒரு பாகிஸ்தானியரைப் பார்ப்பார்களோ அதே கண்ணால் தான் அவர்களும் பார்க்கிறார்கள். அவர்களது அடையாளம் வேறு, அவர்களது தந்தையின் அடையாளம் வேறு. ஒரு சுயஅடையாளத்திற்கான தேடல் அதிகமாக புகலிடத்தில் வாழும் இளைஞர்களிடம் காணப்படுவதில்லை. தான் வாழ்கின்ற சமூகத்தினரால் அவர்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்படாதப்பட்சத்தில் தான் அவர்கள் தங்கள் வேர்களைத் தேடிச் செல்ல முற்படுவார்கள். மேலேத்தேய ஐரோப்பியச் சமூகத்தினரால் கிழத்தேய அல்லது ஆபிரிக்க மக்கள் காட்டுமிணாண்டிகளாக, நாகரீகமற்றவர்களாக, சரித்திரம் அற்றவர்களாகவே சித்தரிக்கப்படுகிறார்கள்.



இவ்விம்பம் அச்சமூகங்களில் இளம்சந்ததியினரின் மூளையில் ஆரம்பத்திலிருந்தே திணிக்கப்படுகிறது. இந்த மூளைச்சலவைக்குள் இங்கு வாழும் எமது குழந்தைகளும் சிக்கிவிடுகிறார்கள்.

இந்த நிலமையை மாற்றுவதற்கு வெறும் கண்டிப்பும், குழந்தைகள் சொல்லும் எல்லாவற்றையும் மறுப்பதும் மருந்தாகிவிடாது. மாறாக நாமும் அவர்களின் உலகிற்குள் புகுந்து அவர்களுடன் சிநேகமானமுறையில் அணுகி, முதலில் அவர்கள் சொல்வதைச் செவிமடுத்து, பின் சிறிது சிறிதாக அவர்களுக்குத் தெளிவுபடுத்த முயற்சிக்கவேண்டும். இதற்கு முக்கியமானது ஒரு சுமுகமான குடும்பச் சூழலே. இது எமது பல குடும்பங்களில் காணப்படுவதில்லையென்பது மிகவும் வேதனைக்குரியது. தந்தை கண்டிப்பானவராகவும் அவருடன் தாயைத் தவிர ஒருவரும் அணுகமுடியாதவராகவும் அவரே இறுதி முடிவு எடுப்பவராகவும் இருக்கும் துர்ப்பாக்கிய நிலை மாறி, எல்லோரும் ஒன்றாகக் கலந்து உரையாடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தான் ஆரோக்கியமானது. பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒன்றும் தெரியாதென்றும் பிள்ளைகள் பெற்றோருகளுக்கு ஒன்றும் தெரியாது என எண்ணும் நிலை முதலில் மாறல் வேண்டும்.

இத்திரைப்படத்தில் வரும் குடும்பத்தின் இளையமகன் ஊடாக கதாசிரியர் இந்த வேறுபட்ட கலாசாரங்களுக்குள் வாழும் குழந்தைகளின் மனோநிலையைப் பிரதிபலிக்கச் செய்கிறார். அவன் ஒருவிதப் பயந்தசுபாவம் கொண்டவனாகப் படைக்கப்பட்டுள்ளான். அவனுக்குத் தந்தை கட்டாயப்படுத்திச் சுண்ணத்துச்சடங்கு செய்யும் வேளையில் அவன் பயத்தாலும், வேதனையாலும், அவமானத்தாலும் அல்லுறப்படுவதாகக் காட்டப்பட்டுள்ளது. அவன் படத்தின் முழுக்காட்சிகளிலும், உறங்கும் போதும் கூட தன் ஜக்கற்றை அணிந்த வண்ணமேயுள்ளான். இது அவனது நிட்சயமற்ற, பயந்த, தனக்குள் எல்லாவற்றையும் ஒளித்து வைத்திருக்கும் குணாம்சத்திற்கான அடையாளமாகவேயுள்ளது.

இறுதிக்காட்சியில் சகோதரர்களுடனான சண்டையின் போது அவனது ஜக்கற்றின் தொப்பிப்பகுதிக் கிழிக்கப்படுகிறது. அவனது மூத்த சகோதரன் இதை தன் தயாரிடம் கூறும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போது, அவள் இது ஒரு ஆரம்பமாகவிருக்கட்டும் எனக் கூறுகிறாள்.

இனி அடுத்ததும் மிகவும் முக்கியமானதுமான கோணத்திலிருந்து தரிசிப்போம்.

இத்திரைப்படத்தை வெறுமனே புகலிடத்தில் வாழும் தந்தையின் ஆதிக்கமும் , அதனுடனான பிள்ளைகளின் முரண்பாடாக மட்டுமே எடுத்துக்கொள்ளப்படலாமா?

இத்திரைப்படம் இத்தகவலை மட்டும் தான் தருகிறதா அல்லது தன்னகத்தே மறைமுகமான இன்னொரு விமர்சனத்தையும் அடக்கியுள்ளதா?

இப்படம் மேற்குலக பார்வையாளர்களை குறியாக வைத்தே எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே இது வெறும் குடும்பத்தலைவனிற்கான விமர்சனமாக எடுத்துக்கொள்ள முடியவில்லை.

இது ஒரு சமூகத்தின் மீது, ஒரு மத நம்பிக்கையின் மீது வைக்கப்பட்டுள்ள ஒரு விமர்சனமாகவே எடுத்துக் கொள்ளவேண்யுள்ளது. விமர்சனம் என்பதிலிருந்து ஒரு படி மேலே போய் ஒரு சமூகத்தின் பழக்கவழக்கங்களை கேலியும் செய்கிறது. இதற்காகவே இதையோரு நகைச்சுவை கலந்தத் திரைப்படமாக எடுக்கவும்பட்டுள்ளது.



இத்திரைப்படத்தை ஒரு ஐரோப்பியச் சூழலிலிருந்துப் பார்க்கும் போது நன்கு உணரமுடிகிறது. எந்தெந்தக் காட்சிகள் நகைச்சுவைத்தனமாக எடுக்கப்பட்டுள்ளது, எந்தக் காட்சிகள் பார்வையாளர்களின் கரகோசத்தையும், சிரிப்பையும் பெறுகிறது எனப்பார்க்கும் போது நன்கு புலப்படுகிறது. ஒரு ஆசியப் பெண்ணாக இருந்து இதைப்பார்க்கும் போது மிகவும் எரிச்சலைத் தருகின்றது.

மதங்களும் அடிப்படைவாதமும் பிற்போக்குத்தனமானது, பெண்களை எப்படியெல்லாம் அடிமைப்படுத்துகிறது என்பது நிதர்சனமான உண்மை.

ஆனால் மேற்குலகங்கள் வெறும் கீழத்தேய சமூகமுறைகளையும், மதங்களையும் கேலிப்படுத்துவதன் மூலம் அச்சமூகங்களை வெறும் காட்டுமிராண்டித்தனமான பெறுமதியற்றவையாகவே காட்டுகின்றன.

இத்திரைப்படத்தின் ஆரம்பக் காட்சியில் ஒரு கிறிஸ்தவ மத ஊர்வலம் செல்கிறது. இதில் கான் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் மிகவும் குதுகலமாக கலந்துகொள்கிறார்கள். ஆனால் இஸ்லாமிய மதமுறைகளை கடைப்பிடிக்கச் சொல்லும் போது அல்லது பள்ளிக்குச் செல்லக் கூறும் போது இளைய மகன் கட்டிலுக்குள் ஒளிவதுமாகவே காட்டப்பட்டுள்ளது. இஸ்லாமியர்களின் மதச்சடங்கான சுண்ணத்துச்சடங்கு மிகவும் கேலிக்குள்ளாக்கப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை விமர்சனம் செய்யும் போது நாம் எந்தக் கண்ணோட்டத்துடன், உளசுத்தியுடன் பார்க்கிறோமா அல்லது வெறும் இனவாதத்தன்மை மட்டுமே ஒளிந்துள்ளதா என்பதைப் பார்க்கத் தவறக்கூடாது.

அக்குடும்பத்தின் ஒரு மகன் நான் பாக்கியைக் கல்யாணம் செய்யமாட்டேன் எனக் கத்துவது எமக்குள்ளே எம்மைப்பற்றி எப்படி மறைமுகமாக இந்த மேற்குலகம் எதிரானக் கருத்தை விதைத்துள்ளது என்பது கண்கூடு.

ஒரு குடும்பத்தைச் சேர்ந்த அனைவருமே ஓரே வானுக்குள் நெறிந்து உட்காருவதுமான காட்சியும், குளிக்கும் தொட்டிக்குள் சிறுநீர் கழித்துவிட்டு அதற்குள் இறங்குவதுமான காட்கிகள் மிகவும் அபத்தமானவை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சமாதானம்



சமாதன பறவைகளே!
உங்கள் இறக்கைகள்
உங்களிடம் இல்லையா?
எம் மக்களுக்காய்
உன் இறக்கைகள்வலுப்பெற வேண்டும்.
விடியாத அகதி முகாமில்
காத்திரக்கும் சிறுவர்களைப் பார்
கூட்டுப் புழுக்களானர்கள் பார்

அடர்ந்த காடுகளில்
துப்பாக்களுடன் முட்களின் மேல் ஓடி
அடி வயிற்றில் அக்கினியை பிரசவித்து
சாம்பல் துவல்களாய்
விடுதலைக்காய்
மண்ணுடன் கலந்து போன
இளைய தலைமுறையைப் பார்
அவர்களிடம் பேசு சமாதனம் பற்றி

இரவொன்றில் கைதியாகி
தெரு நாய்களாய் அடைத்து
செல்லப்படும்
தமிழ் இனத்துடன் பேசு
சமாதானத்தின் எதிர்பார்ப்பு பற்றி

தாய் நாட்டை தொலைத்து விட்டு
அகதியாய் சபித்து எறியப்பட்ட
கண்களுடன் நீ பேசு
உடமைகளையும் குழந்தைகளையும்
தொலைத்து விட்டு
சமாதிகளுக்கு முன்

வாய்பொத்தி அழும்
தாயுடன் நீ பேசு
சமாதானத்தின் தேவை
பற்றி.

ஊதியத்திற்காய்
விடைபெற்றான்
சடலமாய் ஒப்படைக்கப்பட்டான்
அங்கே தலை அடித்து அழும்
அந்த சிங்களத் தாயுடன் நீ பேசு

எங்கள் மண்ணில்
குதறப்பட்டு கிடக்கும்
இயற்கையின் பாடலைக்கேள்
அது பேசும்
சமாதானத்தின் தேவை பற்றி

காதைக்கிழிக்கும் யுத்தத்தை
கடந்து
ஒழிக்கட்டும் சமாதானக்குரல்கள்

சமாதானப் பறவைகளே
எம் மக்களுக்காய்
அகிம்சை குரலை
காவிச்செல்லம் உன்
இறக்கைகள் வலுப்பெற வேண்டும்.

எம் மண்ணின் யுத்தம்
அதிகாரத்தில் உள்ளவர்களினாலும்
ஆயுத வியாபாரிகளினாலும்.

**பாமதி (அவுஸ்திரேலியா)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய விடுதலைப் போராட்டமும் பெண்களின் நினைவுகளும்

-ஜெயந்திமாலா- (சுவிஸ்)

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்ட சூழல் பல சந்தர்ப்பங்களில் எமது இலக்கில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளது. இது தனியே பெண்களுக்குரியதாக மட்டும் அமையவில்லை. என்றாலும் இந்த சர்வதேச மகளிர் தினத்தில் (மார்ச் 8) பெண்கள் தொடர்பான விடயங்கள் மட்டுமே நோக்கப்படுகின்றன.

தேசிய விடுதலையில் ஆண்கள் எந்தளவிற்கு விடுதலையை நேசித்து இணைந்து கொண்டார்களோ- அதற்கு எந்த வகையிலும் குறைத்து மதிப்பிடமுடியாத வகையில் பெண்களும் இணைந்து கொண்டனர். இதன் அர்த்தம் பெண்கள் துப்பாக்கிகளை ஏந்திப் போராடுவது மட்டும் தான் - அந்த இணைவு என்பதல்ல.



எமது போராட்டத்தின் முதல் பெண் போராளி EPRLF அமைப்பு - காரைநகர் கடற்படை முகாமைத் தாக்கிய போது வீரச்சாவை அடைந்த ஷோபா என்பது மறைக்கப்பட முடியாததொன்றாகும். போராட்டக்களத்தில் நின்று வீரச்சாவைத் தழுவிய முதல் பெண் அவர்தான் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

மற்றும் இந்திய இராணுவத்தின் ஆதிக்க ஆக்கிரமிப்பு வெறிக்கு எதிராக உண்ணாவிரதம் இருந்து மரணித்த அன்னை பூபதியும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெண்களின் வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய ஆவணமாக உள்ளனர்.

அதே வேளை, தேசிய விடுதலைப் போராட்டச் சூழலில் ஜனநாயக மறுப்புக்களையும் கருத்துச் சுதந்திரங்களையும் பெண் விடுதலையையும் அரசியல் சுதந்திரத்தையும் வேண்டி நின்று மாற்றுக் கருத்துள்ளவர்களுக்கு மரணதண்டனையை வழங்கும் எமது போராட்ட ஜனநாயக மறுப்பு வரலாற்றில் பலியாகிப்போன யாழ் பல்கலைக்கழக மருத்துவப்பீடத்தை சேர்ந்த கலாநிதி ராஜினி திராணகமவையும் செல்வியையும் நினைவு கூராமல் தமிழ்ப் பெண்கள் மகளிர் தினத்தை அனுஷ்டிக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் இந்திய இராணுவத்தின் அட்டூழியங்களையும் தமிழ்க்குழுக்களின் அடாவடித்தனங்களையும் "முறிந்தபனை" என்ற நூலின் மூலம் வெளிக்கொணர்ந்த ராஜினியை எமது துப்பாக்கிச் கலாச்சாரம் பலி கொண்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் ராஜினி தான் கொலை செய்யப்படுவதற்கு முன்னர் தனது நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றின் வாசங்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளைக் குறிப்பிடுவது பொருத்தமானதாக அமையும்.

"என்றாவது ஒரு நாள் துப்பாக்கி என்னை அமைதியாக்கிவிடும். ஆனால் அது வேற்று மனிதன் ஒருவனால் ஏந்தப்படுவதாக இருக்காது. மாறாக எனது வரலாற்றைப் பகிர்ந்து கொள்ளும் இச்சமூகத்தில் வாழும் ஒரு பெண்ணின் கருவறையில் இருந்து பிரசவிக்கப்பட்ட ஒரு புத்திரனால் ஏந்தப்படும் ஒரு துப்பாக்கியாகவே அது இருக்கும்'' என்று அவர் அக்கடிதத்தில் எழுதியிருந்தார்.

மற்றவர் செல்வி வன்னியில் பெண்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்ததுடன் வன்னித் தளத்தில் அரசியல் விழிப்புணர்ச்சியைப் பெண்களுக்கு ஏற்படுத்தியும் எழுதியும் வந்த ஒரு சமூக நோக்கினைக் கொண்ட ஒருவர் யாழ் பல்கலைக்கழகத்தின் மாணவி.

விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகள் கடந்து விட்டன. அவள் கொலை செய்யப்பட்டு விட்டாள் என்றே நம்பப்படுகின்றது. செல்வியின் கவிதைகளுக்காக INTERNATIONAL PEN என்ற அமைப்பு அவளுக்கு 1992ம் ஆண்டிக்கான பரிசை வழங்கியிருந்தது. செல்வி என்று அழைக்கபட்ட செல்வநிதி ஈழத்தின் நெருக்கடியான போராட்டச்சூழலில் இத்துறையில் சேவை புரிந்தமைக்காக இப்பரிசு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த செல்வி எம் மத்தியில் இன்று இல்லை. இச்சந்தர்ப்பத்தில் செல்வியின் நினைவாக அவரது கவிதையொன்றை இங்கு தருகின்றேன்.

"இராமனே இராவணனாய்'

என்னை யாரும் கேள்வி கேட்டுத்
தொந்தரவு செய்யாதீர்கள்
நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கின்றது
எனது இதயம்
எந்த நேரமும் விழுந்து
வெடித்து விடக்கூடும்
அசோக வனங்கள்
அழிந்து
போய்விடவில்லை
இந்த வீடே
எனக்கான அசோக
வனமாயுள்ளது
ஆனால்
சிறைபிடித்தது
இராவணனல்ல,
இராமனேதான்

இராமனே இராவணனாய்
தனது அரசிருக்கையில்
முதுகுப்புறமாய்
முக மூடிகளை மாற்றிக்
கொண்டதை
பார்க்க நேர்ந்த கணங்கள்
இதயம் ஒருமுறை
அதிர்ந்து நின்றது.
இந்தச்சீதையை சிறைமீள வருவது யார்?
அசோக வனங்கள்
இன்னும்
எத்தனை காலத்திற்கு

இந்தச்சந்தர்ப்பத்தில் பெண்விடுதலைக்கு குரல் கொடுத்த சிவரமணியையும் நாம் விட்டுச்செல்ல முடியாது. இந்தச் சமூகத்தில் அவள் கொண்டிருந்த மாபெரும் நம்பிக்கை வீணாகிப் போனபோது தனது மரணத்திற்கு தற்கொலையைத் தேடிக்கொண்டவள்- சிவரமணி. எமது சமூகத்தில் புரையோடிப் போயுள்ள வரட்டு மரபுகளுக்கும் ஆணாதிக்க ஒடுகஇகு முறைகளுக்கும் நாளாந்தம் பலயாகிக் கொண்டிருக்கும் பெண்களின் குறியீடாக இங்கு சிவரமணியை நாம் நினைவு கூருவோம்.

இந்தநூற்றாண்டில் தேசிய விடுதலையில் தம்மை இணைத்துக் கொண்டு போராடும் விடுதலைப் புலிகளின் அனைத்துப் பெண் போராளிகளுக்கும் மணல் ஆற்று யுத்தமொன்றில் ஒரே கணத்தில் மடிந்து போன நூற்றுக்கும் அதிகமான விடுதலைப் புலிகளின் பெண்போராளிகளுக்கும் பெண்களாகிய எமது அஞ்சலியை நாம் செலுத்துவோம். அதேவேளை யுத்த தர்மம் என்பதைக் கேலிக்குரியதாக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வகையில் அந்தப் போராளிகளின் ஆடைகளை அகற்றி தமது ஆத்திரத்தைக்காட்டிய சிறிலங்காப் படையினரின் ஆண்வர்க்க ஆதிக்கத் தனத்தையும் கண்டனம் செய்வோம்.

வடக்கில் இருந்து விரட்டப்பட்ட முஸ்லிம் பெண்களையும் அகதிகள் முகாம்களிலும், சிறைகளிலும் அடைந்து அடைந்து கிடக்கும் அனைத்துப் பெண்களையும் நினைவு கூர்வதோடு சர்வதேசப் முழுவதும் தமது உரிமைகளுக்காகப் போராடும் அனைத்து நேசசக்திகளையும் பெண்விடுதலை அமைப்புகளையும் பெண்களையும் பெண்ணியவாதிகளையும் தொடர்ந்தும் தமது பணியை மேற்கொள்ளுமாறு எமது ஆக்கபூர்வமான உற்சாகத்தை வழங்குவோம்.

எமது போராட்ட வரலாற்றில் ஆண்களுக்காகப் பெண்களைப் பழிவாங்கும்- பணயம் வைக்கும் நிகழ்வுகளும் இடம் பெற்றுள்ளன. பணம் பறிப்பதற்காக பெண்களைக் கடத்திச் செல்வதும் பெண்களைச் கைது செய்வதும் தடுத்து வைப்பதும் சாதாரணமாக பல சந்தர்ப்பங்களில் இடம் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் சமூக பொருளாதார- அரசியல் ரீதியான பாதிப்புக்கள் பிரச்சினைகள் ஏற்படும் போது அவற்றிற்கு முகம் கொடுத்து எதிர்நீச்சல் போட்டு வாழவேண்டிய ஒரு பெரும் சுமை அந்தச்சமூகத்தின் பெண்களையே சார்ந்தததாக உள்ளது. இந்த வகையில் எமது விடுதலைப் போராட்டத்தின் இதுவரையான வரலாறு எமது பெண்களின் உரிமைகளை மிகக் மிக குறைவாகவே அங்கீகரித்துள்ளது.



*அன்புடன் நன்பர்களுக்கு,*

## செல்வியின் நினைவுப் பதிவு

*செல்வியின் (செல்வநிதி தியாகராஜா) நினைவாய் அவரது பன்முக ஆளுமைகளையும், சிந்தனைகளையும், பதிவு செய்ய விரும்புகின்றோம். செல்வியினால் எழுதப்பட்ட கவிதைகள், கட்டுரைகள், தினக்குறிப்புகள் மற்றும் அவரின் ஓவியங்கள், அவர் எடுத்த புகைப்படங்கள், அவரது புகைப்படங்கள், அவரது ஏனைய எழுத்துப்பிரதிகள் தங்களிடம் இருப்பின் அனுப்பி வைத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறோம். மூலப்பிரதிகள் தங்களுக்கு திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் உறுதி அளிக்கிறோம். செல்வி பற்றிய நினைவுகளையும், உங்கள் படைப்புகளையும் நாம் எதிர்பார்க்கிறோம்.*

*தொடர்புகளுக்கு*
*செல்வி படைப்புகள் தொகுப்பு*

UYIRNIZHAL
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, FRANCE.
e-mail: EXILFR@aol.com

... மானுட நேயம் நோக்கிய வாழ்வை படைத்திட முயல்கையில் எத்தனை தடைகள் கொடூரம் மிகுந்த விழிகள் தொட வாழ்தலில் கசப்பு நெஞ்சை நெருடும் மனிதம் மறந்து சவமாய் கிடந்து வாழ்தலில் எனக்குப் பிரியமேயில்லை...

-செல்வி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாடகைக்குக் கருப்பைகள்

"குழந்தை பெற்றுத்தருவதற்கு வாடகைத் தாய் தேவை"

குழந்தையில்லாத தம்பதிகளுக்கு ஒரு குழந்தையைப் பெற்றுத்தரக்கூடிய இந்த மனிதாபிமான சேவைக்கு: திருமணமான, குறிப்பிடத்தக்க நோய்களை எதுவுமேயில்லாத, ஆரோக்கியமான பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

மருத்துவப் பரிசீலிப்பில் தாங்கள் தாயாகத் தகுதியானவர் என அடையாளம் காணப்படும் பட்சத்தில் இந்தச் சேவைக்கான வேதனம் நேரில் பேசி நிர்ணயிக்கப்படும்.

அமெரிக்கா போன்ற நாடுகளிலேயே வாதப் பிரதிவாதங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த விளம்பரங்கள் இப்போது தமிழகத்துச் செய்தி நாளேடுகளிலும் இடம்பெற ஆரம்பித்துள்ளன.

கருவறையில் உள்ள கோளாறுகளினால் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாத வேறொரு பெண்ணுக்காக, அந்தத் தம்பதிகளின் உயிரணுக்களைத் தனது கருவறையில் பத்து மாதம் சமந்து குழந்தையைப் பெற்றுக்கொடுத்துவிட்டுப் போகும் பெண்ணையே மருத்துவ உலகு "வாடகைத் தாய்" (Surrogate mother) என அழைக்கிறது.

உலகின் முதலாவது சோதனைக் குழாய்க் குழந்தை 1978இல் இங்கிலாந்தில் பிறந்தபோது உலகம்பூராவும் உள்ள குழந்தையில்லாத தம்பதிகள் அனைவருமே இந்த மருத்துவ அற்புதத்தைக் கேட்டுக் களிப்படைந்தார்கள். ஒழுக்கநெறி, அறநெறி சார்ந்த பல வினாக்களைத் தம்மகத்தே கொண்டிருக்கும் பல மருத்துவ விந்தைகளின் சகாப்தத்திற்கு இச் சோதனைக் குாய்க் கருத்தரிப்பு அப்போதே கட்டியம் கூறிவிட்டது.

திருமணமான ஒவ்வொரு தம்பதியும் தங்கள் கரங்களில் முதன்முதலாக அவர்களுடைய இளம்பிஞ்சு தவழும் நன்நாளை, முரசு கழித்து முத்துப்பல் கிளம்பும் நாளை, மழலைப் பேச்சில் செவி நனையும் நாட்களை, அதன் தளிர் நடையை, கற்று - வளர்ந்து- பெரிதாகி அடுத்த சந்ததிக்குக் கிளை பரப்பும் இனிய வசந்த வருடங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். ஆனால் எல்லோருக்குமா இந்தக் கனவு நிறைவேறி விடுகிறது? துரதிருஷ்டவசமாக அவர்களின் கட்டுப்பாட்டுக்கும் அப்பாலுள்ள சில காரணங்களினால் ஏராளமான தம்பதிகளால் இந்த இனிய அனுபவங்களைப் பெற முடியாமல் போய் விடுகிறது.



ஏராளமான குடும்பங்களில் குழந்தைகயின்மை மண வாழ்க்கையின் முழு நோக்கத்தையுமே சிதறடித்து விடுகிறது. பூரிப்பின் ஒட்டுமொத்த உருவமான குழந்தை கிடைக்கத் தவறியதும் பெரும் பூகம்பமே அங்கு நிகழ்ந்து விடுமிறது. குழந்தையில்லை என்ற வேதனையுடன் சமூகத்தின் கேள்விக்கணைகளும் இவர்களைப் பாடாய்ப்படுத்துகிறது. இதில் ஆண்களை விட அதிகம் அவதிப்படுவது பெண்கள் தான். கோளாறு ஆண்களிடம் இருப்பினும் பெண்களே "ஒரு புழு பூச்சிக்குத் தாயாக முடியாத மலடு" என்ற விமர்சனத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. உச்சகட்டமாக, பல குடும்பங்களில் இரண்டாவது திருமணத்தை நாடிச் செல்லும் கணவரால் கடைசியில் நிராதவராக்கப்பட்டும் விடுகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குழந்தையில்லாத தம்பதிகளில் கணிசமான பகுதியினர் இப்போது, தமது மலட்டுத் தன்மையைக் களையும் இனப்பெருக்கத் தொழில்நுட்ப உதவிகளை (Assisted Reproductive Technology- ART)நாடிச் செல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். கருமுட்டையைப் பெண்ணின் உடலுக்கு வெளியே எடுத்து ஆணின் விந்துடன் கருக்கட்ட வைத்து, இதனால் உண்டாகும் முளையத்தைப் பெண்ணின் கருப்பையில் பதிய வைத்துக் குழந்தையை உருவாக்கும் சோதனை குழாய் முறை இப்போது சர்வ சாதாரணமாகிவிட்டது. இதற்கும் மேலாக, முட்டையை உருவாக்க முடியாத பெண் இன்னொரு பெண்ணிடம் முட்டையை வாங்கவும் முடியும். அதேபோல விந்து வங்கியில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் விந்தைப் பெறுவது கூட நடைமுறைக்கு வந்துவிட்டது. இந்தத் தொழில்நுட்பத்தின் அடுத்த கட்டம்தான் வாடகை அம்மாக்களின் மூலம் குழந்தையைப் பெற்றுக்கொள்ளுதல்.

மாதந்தோறும் வளமான முட்டையை உருவாக்க முடிந்தும், கருப்பைக் கோளாறுகளால் குழந்தையைச் சுமக்க முடியாமல் வாடும் பெண்களுக்கு இந்தத் தொழில்நுட்பம் இறுகக் கை கொடுக்கிறது. இத்தகைய பெண் ஒருவரின் முட்டையையும் அவரது கணவரின் உணிரணுவையும் செயற்கையாக இணைச் செய்து இன்னொரு பெண்ணின் கருப்பையில் பொருத்தி அங்கே குழந்தையாக வளரச் செய்யும் வாடகைத் தாய்முறையில் குழந்தைகளை உருவாக்கும் அமைப்பு ஒன்று (The Centre for surrogate Parenting) 1986இல் இருந்து இதுவரை பல நூற்றுக்கணக்கான குழந்தைகளை, குழந்தையில்லாத தம்பதிகளுக்காக உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. குழந்தை ஒன்றை இந்த முறையில்உருவாக்க முளையத்தைப் பதிய வைக்கும் மருத்துவச் செலவுக்கும், குழந்தையைச் சுமக்கும் வாடகைத் தாய்க்கும் உரிய செலவும் ஆக அமெரிக்காவில் மொத்தம் 50,000 அமெரிக்க டாலர்கள் செலவாகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.



இங்கிலாந்தின் சோதனைக்குழாய் குழந்தை உருவாக்கப்பட்டு சரியாக எட்டு வருடங்களின் பின்னரே 1980களில் இந்தியாவில் மும்பையில் முதல் சோதனைக்குழாய் உருவாக்கப்பட்டது. பிற நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்திாவில் இது மாதிரியான குழந்தைபேற்றுக்கு ஆகும் செலவு குறைவாக இருப்பதாலும் அங்கு சிகிச்சைக்காக பதிவு செய்துவிட்டு மிக நிண்ட காலம் காத்திருக்க வேண்டியிருப்பதாலும் உலகின் கவனம் இந்தியாவின் பக்கம் திரும்பியுள்ளத. இருந்தும் 1990இல் டொக்டர் கமலா செல்வராஜ் (இவர் பழம்பெரும் நடிகர் ஜெமினி கணேசனின் மகள்) சென்னையிலுள்ள தனது ஜ.ஜி.மருத்துவமனையில் இயங்கும் கருத்தரிப்பு ஆராய்ச்சி மையத்தில் தென்னிந்தியாவின் முதலாவது சோதனைக்குழாய் குழந்தையை வெற்றிகரமாக உருவாக்கிக் காட்டிய பின்னா தான் உலகம் பூராவும் உள்ள குழந்தையிலாத தமிழர்களுக்கு இந்த தொழில்நுட்பபத்தில் அதிக நாட்டம் ஏற்பட்டிக்கிறது. தென்னிந்தியாவின் முதலாவது சோதனைக் குழாய் குழந்தையை உருவாக்கியவர் என்ற பெருமையை முதன்முறையாக (1994) இந்தியாவிலேயே வாடகைத் தாய் மூலம் குழந்தையை உருவாக்கியவர் என்கிற பெருமையும் இவருக்கிருக்கிறது.

வாடகைத்தாய் மூலம் குழந்தையை பெற்றுக்கொள்வதை தமிழர்கள் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்கிறார்கள் என்கிற கேள்வியை "சமூகம் பற்றிய சில தயக்கங்கள் எல்லோருக்கும் வரலாம் இருந்தும் ஒரு குழந்தைக்குத் தாயாவதற்கு பெரும்பாலும் எந்த சிகிச்சைக்கும் தயாராகவே வருகின்றார்கள். குழந்தையின்' பாரம்பரியத்தை அதை சுமக்கும் வாடகைத் தாய் எந்த வகையிலும் பாதிப்பதில்லை. முட்டையை கொடுத்தவரே உண்மையான உயிரியல் தாய் என்பதால் தம்பதிகள் தரப்பில் இந்த முறைக்கு மறுப்பில்லை ஆனால் குழந்தையைப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்றுக்கொடுப்பதற்கு வாடகைத் தாயை ஒழுங்கு செய்வது தான் மிகக் கடினமான ஒன்றாக இருக்கிறது." என்கிறார் டாக்டர் கமலா செல்வராஜ். இது உண்மையில்லாமலுமில்லை. இந்தியா போன்ற ஐதீகத்தால் கட்டுண்ட மூன்றாம் உலக நாடுகளில் நமது அன்றாட வாழ்க்கையில் சமூக சமய காரணிகள் வகிக்கும் பங்கு பழமையிலிருந்து புதுமைக்கு திரும்புவது சவாலாகவே இருக்கின்றது. வாடகைத் தாய் தேவையென்று சமீபத்தில் ஜி.ஜி.மருத்துவமனை வெளியிட்ட விளம்பரத்திற்கு மிகக் குறைவான பெண்களே விண்ணப்பித்துள்ளனர். காத்திருப்போரை ஈடுகட்ட இது போதுமானதல்ல. குழந்தை தேவைப்படும் பெண்ணுக்கு அவரது தாயாரோ அல்லது சகோதரிகளோ அல்லது நண்பர்களோதான் இம்முறையில் மாற்றுத்தாயாக முதலில் உதவ முடியும் மகளுக்காக மகளின் குழந்தையை தாய் சுமக்க பல சந்தர்ப்பங்களில் தாயின் வயது ஒரு தடையாகி விடுகிறது. வாடகைத் தாயாக மனிதாபிமானத்துடன் உதவ முன் வருகின்ற பெண்களின் உறவினர்களும் பெண்களின் உறிவனர்களும் இதற்கு சம்மதம் வழங்கவேண்டுமே? திருமணம் ஆகாதவர்கள் இதில் ஈடுபட்டால் பின்னாளில் அவர்களின் திருமணம் தடைப்படவும் வாய்ப்பிருக்கிறது. உறவு - நடபு வட்டத்திற்கு வெளியே இர்நது வருகின்ற பெண்களைப் பெரும்பாலும் பணத்தின் தேவையே இதற்கு நிர்ப்பந்திக்கிறது. கணவனால் கைவிடப்பட்ட ஆதவரவற்ற பெண்மணி ஒருவர் வாடகைத்தயாகி ஜி.ஜி. மருத்துவமனையில் ஒரே முறையில் 3 குழந்தைகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறார். சென்னையில் ஆகக் குறைந்தது 1 இலட்சம் ரூபாய் வரையில் வாடகைத்தாய்க்கு விலை பேசப்படுகிறது.

வாடகைத்தாய் கைகூடிய பின்னரும் பிரச்சினைகள் தொடர வாய்ப்பிருக்கிறது. வாடகைத் தாய்மார்கள் அனைவரிடமும் கரு தங்கிவிடுவதும் இல்லை. பலருக்கும் கரு சிதைவுக்கு ஆளாகிவிடுகிறது. உண்மையில் இனப்பெருக்கத்திற்கு துணை செய்யும் இது போன்ற தொழில் நுட்ப முறைகள் எல்லாவற்றிலுமே வெற்றி வாய்ப்பு என்பது பரிசு சீட்டுக்களில் கிடைக்கும் அதிஸ்டத்தைப் போன்றதே. பிரச்சனை இதனுடன் தீருவதாய் இல்லை. அமெரிக்காவில் சட்டரீதியான ஒப்பந்தங்களினால் இம்முறை நிர்வகிக்கப்பட்ட போதும் குழந்தை பிறந்ததும் வாடகைத்தாய்மார்கள் அதை உரியவர்களிடம் ஒப்படைக்க மறுத்த உதாரணங்களும் உண்டு. குறிப்பாக தாய்மை அடைந்திருக்கும் போது ஏற்படும் உளவியல் ரீதிலான அழுத்தங்கள் குழந்தையைப் பிரிவதை மறுக்க வைக்கிறது. இதனாலேயே சமீபகாலமாக இது பெண்ணியவாதிகளினதும் உளவியல் - சட்ட வல்லுனர்களினதும் கவனத்தை ஈர்க்கத்தொடங்கியுள்ளது.

தன்னுடைய விந்தைக் கொண்டு குழந்தை உருவாக்க பெண்ணொருவரின் உடலை வாடகைக்கு எடுப்பதன் மூலம் பெண்ணின் சுதந்திரத்திற்கு ஆண் கடிவாளம் போடுவதாகவே பெண்ணிலைவாதிகள் வாடகைத்தாய்மை பற்றி (Surrogate mother) கருத்து தெரிவித்துள்ளனர். வாடகைக்கு குழந்தையைப் பெற்றுக் கொடுத்தல் குழந்தையை விற்பதற்கு சமமானது என்றும், இது பணக்கார தம்பதிகள் ஏழை பெண்களை சுயநலத்திற்காக உபயோகிக்க வழிவகுத்து விடுகிறது என்பதும் இவர்களது கருத்தாக இருக்கிறது. பெண்ணின் குழந்தைப் பேற்றை மறறொரு வர்த்தக உற்பத்திக்குரிய செயற்பாடு போன்று கருதினால் தாய் சரியாகவும் சீராகவும் தனது குழந்தையுடன் உருவாக்கி வைத்திருக்கும் அபூர்வமான உணர்சிசிமயமான பிணைப்புக்கும் பங்கம் ஏற்பட்டவிடும் என்பது உளவியல் வல்லுனர்களின் குரலாக இருக்கிறது. சமூகவியலாளர்களோ, வாடகைக் கருத்தரிப்பு முறையானது அநாதைகளைத் தத்தெடுக்கும் வாய்ப்பைக் குறைப்பதாக கருதுகின்றனர்.

ஆனால் "வாடகைகருத்தரிப்பு முறை பெரும் வியாபாரமாக மாறியிருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இது சில பிரச்சனைகளை கிளப்பியிருக்லாம். இருந்தாலும் வேறெந்த முறையிலேனும் ஒரு குழந்தையைப் பெறறுக் கொள்ள முடியாத கருப்பை குறைபாடுடைய பெண்களுக்கு குழந்தை ஒன்றைத் தருவதற்கு இதைவிட வேறு என்ன தீர்வு இருக்கிறது? அறிவியல் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் உணர்ச்சிபூர்வமாக பிரச்சனைகளை அணுகாமல் அறிவுபூர்வமாகச் சிந்திக்கலாமே?" என்று கேட்கிறார் டாக்டர் கமலா செல்வராஜ்.

பொ.ஐங்கரநேசன்

http://www.aaraamthinai.com/women/may2000/may09c.asp



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தை வளர்ப்பு: விலங்கொடு மனிதராய்...

**றஞ்சி (சுவிஸ்)**

இன்று புலம் பெயர் நாட்டில் எமது அடுத்த சந்ததி உருவாகிக் கொண்டிருக்கிறது. குழந்தை வளர்ப்பு சம்பந்தமாக நிறைய படிக்க வேண்டிய தேவை எழுந்திருக்கிறது. இது சம்பந்தமாக நிறைய ஆராய வேண்டியுமிருக்கிறது. இவை சம்பந்தமான கருத்துக்கள், வளர்ப்பு முறை, குழந்தைகளை அணுகும் எமது கலாச்சாரமுறை, எமது குழந்தைகளை நாம் வளர்க்கும் விதம், போன்றவைகளை கேள்விக்குள்ளாக்கும் நிலையும் தேவையும் இன்று எமக்கு அவசியமானதொன்றாக இருக்கிறது. நாம் குழந்தையை ஆளுமையுடன் வளர்ப்பது சம்பந்தமாக பெற்றோர்களாகிய எமக்கு எந்த விதமான அறிவும் முன்னர் இருக்கவில்லை. பெற்றோர்களின் ஆளுமைக்குள்ளேயே அவர்கள் முடங்கிப் போக நேர்கிறது. ஆனால் குழந்தைகளை தனித்துவமாக சிந்திக்க பெற்றோர்கள் விட வேண்டும் என்பதை நாம் புரிந்து கொள்வது நல்லது. நாம் புலம் பெயர்ந்து வந்த பின் தான் இதன் தேவையை உணரக் கூடியதாக இருக்கின்றது. இதனால் குழந்தை வளர்ப்பு பற்றி எமது அறிவை விருத்தி செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

குழந்தைகள் சுயாதீனமாக சிந்திக்கும் ஆற்றலை நாம் வளர்க்க வேண்டும் உதவி செய்ய வேண்டும். பெற்றோர்களாகிய எம்மை விட குழந்தைகள் புலம் பெயர் நாட்டின் கலாச்சார முரண்பாடுகளுக்கு இடையில் சிக்கியிருக்கிறாரகள். அத்துடன் எம்முடைய கலாச்சார அம்சங்கள் பற்றிய விளக்கங்களை குழந்தைக்கு விளங்கப்படுத்தி கூறலாமே தவிர அவர்களை வற்புறுத்தக் கூடாது. அடுத்து பெண் குழந்தைகளை பொறுத்தவரையில் ஒழுக்கம், கற்பு என்ற அடிப்படையில் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிப்பது விபரீதமாகி விடலாம். அதாவது இரண்டு கலாச்சாரத்திற்கிடையிலான இழுபறியாக நாம் கையாளக் கூடாது. இரண்டுக்கும் இடையில் சமரசம் செய்து குழந்தை தன்னை நிலைப்படுத்திக் கொள்ள பெற்றோர்கள் உதவ வேண்டும்.

பாலியல் சம்பந்தமான பிரச்சினைகளை பிள்ளையுடன் ஒளிவுமறைவின்றி கதைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான மனப்பக்குவத்தை பெற்றோர்களாகிய நாம் வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவையுமிருக்கின்றது. இப்படி முடியாத நிலையில் குழந்தைகள் எம்மை முறித்துக் கொண்டு தமது விருப்பங்களையும் தேர்வுகளையும் நடைமுறைப்படுத்துகின்றனர். பெண் பிள்ளைகளுக்கு முக்கியமாக பாலியல் சம்பந்தமான கருத்தியல்களை விளங்கப்படுத்த பெற்றோர் முன்வரவேண்டும். புலம்பெயர் நாடுகளில் நீச்சல் ஒரு பாடமாகவே உள்ளன. நமது பெற்றோர்களில் பெரும்பாலானோர் பெண் குழந்தைகள் நீச்சலுக்கு போகக் கூடாது என்ற கட்டுப்பாட்டை விதிப்பதன் மூலம் பெண் குழந்தைகள் மனதில் பாதிப்பு கூடுதலாக ஏற்படுகின்றது. நீச்சலுக்குப் போனால் பிள்ளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கெட்டுவிடும். நீச்சல் உடுப்பில் பிள்ளைகளை பார்க்க பெற்றோர்களுக்கு பயம்தான் காரணம் எங்களுடைய சனங்கள் என்ன சொல்லுவினமோ, எமது சமுதாயத்தில் பெண்கள் நீச்சல் உடை அணிவது மிகவும் கௌரவக் குறைவு போன்றவற்றினால் பெண்பிள்ளைகளை பாடசலையில் இருக்கும் நீச்சல் வகுப்புக்கு அனுமதிப்பதில்லை.

ஒரு பாடசாலையால் ஆசிரியர்கள் நல்ல சினிமாக்களுக்கு தியேட்டருக்கு படம் பார்க்க அழைத்துக் கொண்டு போகும் போது எமது தமிழ் பிள்ளைகளுக்கு மட்டும் பல பெற்றோர் கட்டுப்பாடு விதிப்பதோ அல்லது அது எமது தமிழ் கலாச்சாரம் அல்ல என்று பிள்ளைகளை கட்டுப்படுத்துவது போன்றவைகளினால் பிள்ளைகளின் உணர்வுகள் பாதிக்கப்பட்டு தவறு ஏற்பட இடமுண்டு. இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் பெண் பிள்ளைகளுக்குத் தான். ஏன் பெற்றோர் பிள்ளைகளை இப்படி வேறுபடுத்தவேண்டும் இதனால் பெண் பிள்ளைகளின் மனநிலை பாதிக்கப்படுகின்றது. பெண் பிள்ளைகளுக்கு பெற்றோரே ஆணாதிக்க கருத்தியல்களை திணிக்கவும் சமூகக்கட்டுப்பாடுகள் என்று பெண்பிள்ளைகளை ஒடுக்கவும் முனைகின்றனர். இதனால் பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் பெரிய போராட்டம் நடைபெறுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும்.



குழந்தைகளுக்கு நகை அணிவது சம்பந்தமான ஆசையை ஏற்படுத்துவது கூட நாமும் இந்த சமூகமும் தான். பிறந்த குழந்தையிலிருந்து வயதுக்கு வந்த பெண் குழந்தைகளுக்கு பெற்றோர் நகைகளை அள்ளிப் போடுவதும் என் பிள்ளை ஆசைப்படுகிறாள் என்று பிள்ளையின் மேலேயே பழியை போடும் பெற்றோர்களும் ஏராளம். மற்றப்படி குழந்தையின் இயல்பான விருப்பமும், தேர்வாகவும் இது இருப்பதில்லை. பெண் குழந்தை ஆண் குழந்தை என்று வேறுபடுத்தி விளையாட்டு சாமான்களை வாங்கி கொடுப்பதை தவிர்க்க வேண்டும் குழந்தை என்ற அடிப்படையில் தான் பொதுவாக விளையாட்டு சாமான்களை வாங்கி கொடுக்க வேண்டும். அதேநேரத்தில் விளையாட்டு சாமான் வாங்கும் போது பிள்ளையின் விருப்பத்தையும் தேர்வையும் நாம் கவனத்தில் எடுப்பது நல்லது. பெண்குழந்தை, ஆண் குழந்தை என்று பிரித்து நாங்கள் வளர்க்க முற்படாமல் குழந்தைகளை சுயாதீனமாக சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க பெற்றோர்களாகிய நாம் குழந்தைகளுக்கு உதவி செய்ய வேண்டும். இவற்றையெல்லாம் நாம் கடைப்பிடிக்காவிட்டால் பெண்கள் இரண்டாந்தர பிரஜையாவதற்கான "திணிப்பும் ஏற்றுக் கொள்ளலும்" குழந்தைகளுக்கு உளவியல் ரீதியில் தொடக்கி வைக்கப்பட்டுவிடும். இங்கு தான் குழந்தையிலிருந்தே ஆணாதிக்க கருத்தியல்கள் வேரூன்றத் தொடங்குகின்றன. சிறு சிறு விசயத்தையும் பிள்ளைகளுக்கு விளங்கப்படுத்த வேண்டிய கட்டாயம் பெற்றோர்களுக்கு உண்டு.

எமது வளர்ப்பு முறையில் பிள்ளைகளை அடிப்பதும் வெருட்டுவதும் கட்டுப்பாடுகளை விதிப்பதும் சர்வசாதாரணம். இது குழந்தைகளின் மனதை பாதிப்பதைப் பற்றி பெற்றோர் கவனம் செலுத்துவதில்லை.

உதாரணத்திற்கு பிள்ளை ஒரு படத்தை வரைந்தால் நாம் உற்சாகப்படுத்த வேண்டும். அதை விட்டு குழந்தையிடம் என்னத்தை கிறுக்கி வைத்திருக்கிறாய் தூக்கி குப்பையில் போடு என்றவுடன் பிள்ளை ஆர்வத்துடன் கீறுவதை நிறுத்திக் கொள்கிறது. மனம் சலிப்படைந்து சோர்ந்து போகிறது.

குழந்தை வளர்ப்பு பற்றி எமக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஹிட்லரின் ஜேர்மனில் பெண்களின் நிலை!

**-கேட் மிலட்**

### கேட் மில்லட்

அமெரிக்காவைச் சேர்ந்த கேட் மில்லட் ஆரம்பத்தில் 1969இல் வெளியான அவரது நூலான பாலியல் அரசியல் (Sexual Politics) எனும் நூலின் மூலமே உலகுக்குத் தெரியவந்தார். ஆங்கில மொழிவிசேட பட்டம்பெற்ற இவர் பேராசிரியராகவும் கடமையாற்றியவர். அவரது ஆய்வு நூலுக்கு அரசியலில் பால்நிலை செல்வாக்கு குறித்து அக்கறை காட்டியிருந்தார். ஆணாதிக்க வாழ்முறை தொடர்ச்சியாக இருப்புகொள்ள இலகுவாக்கிய பிற்போக்கு சக்திகள் ஆற்றிய பாத்திரம் அவை வெற்றிகொண்ட விதம் அதன் மூலம் புரட்சிகர சமூக மாற்றம் மேலும் பின்தள்ள காரணமாகிப் போன விதம் என்பன குறித்து விரிவாக எழுதியிருக்கிறார். இந் நூல் பின்னர் வந்த பெண்ணிய ஆய்வுகளுக்கு அதிக துணைபுரிந்துள்ள புகழ்பெற்ற நூலாக கொள்ளப்படுகிறது. அவரது நூலில் ஒரு கட்டுரையான நாசி ஜேர்மனியில் பெண்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் எனும் கட்டுரை இங்கு மொழியாக்கம் செய்யப்படுகிறது.

பொதுவான ஆணாதிக்க அரசியல் கட்டமைப்புக்குள் நடாத்தப்படும் ஏனைய பிரச்சினைகளுக்குள் எவ்வாறு பெண்கள் விசேடமாக அடக்கப்படுகிறார்கள், புனிதங்களின் பெயரால் அவை எப்படி நியாயப்படுத்தப்படுகிறது. இந்த ஒடுக்குமுறைகள் எவ்வாறு திட்டமிட்டு நிறுவனமயப்படுத்தப்படுகின்றன. இதனை எதிர்க்க முடியாதபடி அரச இயந்திரம் எப்படி அடக்குமுறைக்கு தயார்படுத்துகிறது, விடுதலையின் பெயராலும், தாய்நாட்டின் விடிவின் பெயராலும், இனத்துவத்தின் பேராலும், இவை எல்லாம் தவிர்க்கமுடியாது என்பது எப்படி நம்பவைக்கப்படுகிறது என்பது இன்றைய காலகட்டத்தில் தமிழ்ச் சூழலில் அவசியமானவை. அப்படி ஒரு அனுபவத்தைத் தர இந்த கட்டுரை 60 வருடங்களுக்கு முந்திய சூழலுக்குள் கொண்டு போகிறது.

ஹிட்லரின் ஜேர்மனியில் பெண்களுக்கு அளிக்கப்பட்ட இடமானது குடும்பம் தாய்மை போன்றனவற்றை பெற்றுக் கொள்ளக கூடியவாறான நிலையே. என்றாலும், அத்தோடு யுத்தம் தொடக்கப்பட்ட காலப்பகுதியில், ஜேர்மயின் யுத்த தந்திரோபாயமானது யுத்தத்தளபாடங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாகைளில் அதிகளவில் உழைப்பை செலுத்தியவர்கள் பெண்களாவர். கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அடிமை உழைப்புக்கு அள்ளுப்பட்டு வந்த காலத்தில் இந்த நிலைமை அதிகரித்தது. 1933 ஜனவரியில் ஹிட்லர் அதிகாரத்திற்கு வரும்போது தொழிற்சாலைகளில் பணிபுரிந்த உழைப்பாளர்களில் 37.3 வீதம் பெண்களாக இருந்தனர். 1936ஆகும்போது பெண்களின் தொகை 31.8ஆக குறைந்தது. என்றபோதும் 1940 ஆகும் போது மீண்டும் 37.1 வரை வேலை செய்யும் பெண்களின் வீதாசாரம் உயர்ந்தது.

1935இல் யூலை 26 அன்று தேசிய உழைப்புச்சேவை சட்டத்தின் கீழ் பெண்கள்-ஆண்கள் இரு தரப்பினரும் கட்டாய தேசிய சேவைக்கு அமர்த்தப்பட்டனர். 1940இல் இந்த சட்டத்தை மீறமுடிந்த பெண்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. திருமணம், தாய்மை மற்றும் குடும்பம் பற்றிய கற்பிதங்களும், பிரசாரங்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எவ்வாறிருந்தபோதும் நாசி ஆட்சியின் கீழ் தொழில்புரிந்த பெண்களின் தொகை நிச்சயமாக அதிகமாக இருந்தது. இதில் உள்ள ஆச்சிரியம் என்னவென்றால் நாசி ஜெர்மனியில் வேறு துறைகளில் பெண்களுக்கு இருந்த இடம் பற்றி தெரியும்போது தான். பல்கலைக்கழக பிரவேசம் தொடர்பாக கடைபிடித்த கொள்கையின் காரணமாக பெண்களின் பிரவேசம் 10க்கு 1 ஆக இருந்தது. இரண்டாம் நிலை பாடசாலை மாணவர்களில் மூன்றில் இரண்டு வீதம் பெண்களாக இருந்தனர்.



இவற்றை ஆராய்ந்து கொண்டு போனபோது எமக்கு கிடைக்க முடிவுகள் இதுதான். பெண்களை மீண்டும் வீட்டுக்குள் முடக்கி வைத்திருப்பது என்பது நாசிச் சிந்தனையின் பிரதான நோக்கமாக இருக்கவில்லை, மாறாக "சகல உயர் தொழில்களிலிருந்தும் அவர்களை நீக்கி அவர்களை குறைந்த ஊதியம் பெறும் தொழிலாளர்களாக ஆக்குவதாகவே இருந்தது."

1934இல் நாசி வைத்தியச் சபையொன்றில் உரையாற்றிய வைத்தியத்துறை தலைவர் டொக்டர் வாக்னர் இப்படிக் கூறினார். "நாங்கள் பெண்களுக்கு உயர் கல்வியை அளிக்கும் எண்ணத்தை விட்டுவிடுவோம்" என்றார் அவர்.

புதிய முறையினை எதிர்த்து தமது குரல்களை பெண்கள் வெளிப்படுத்தாமலுமில்லை. திம் எனும் டொக்டர், சோபி சோக், பர்னர், அன்னா பெப்ரிட்ஸ் போன்றோர் இதில் அடங்கினர். ஆனால் இவர்களின் குரல்கள் படிப்படியாக ஊமையாக்கப்பட்டன. புதிய அரச யந்திரம் உறுதிபடுத்தப்பட்டதன்பின், நீதிபதிகளாக கடமையாற்றும் உரிமையும் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. 1936 ஆகும் போது நீதிமன்றங்களில் எந்தவொரு பதவியையும் பெண்கள் வகிப்பது தடை செய்யப்பட்டது. நாசிகள் பதவிக்கமர்ந்த போது ரய்க்ஸ்டாக் எனும் பிரதேச அட்சியில் பெண் உறுப்பினர்கள் 30 பேர் அங்கம் வகித்தனர். 1938இல் ஒரு பெண்ணும் அங்கம் வகித்திருக்கவில்லை.

இதே காலப்பகுதியில் பிரச்சார சாதனங்களால் தாய்மை கருத்தாக்கங்களும், குடும்பம், வீடு உயர் குணங்கள் என்பன பற்றிய கருத்துருவாக்கங்களும் பரப்பப்பட்டன. இதன் நோக்கம் பெண்களை உழைப்பில் ஈடுபதிலிருந்து அகற்றும் நோக்கத்தைக் கொண்டதாகவே இருந்திருக்க முடியும். இரண்டு வருமானமுடைய குடும்பங்களுக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட சட்டங்களும், எந்தவித காரணமுமின்றி திருமணமான, திருமணமாகாத பெண்களை தொழிலிருந்து நீக்கப்பட்டதையும் நாம் கவனத்திற்கு எடுக்க வேண்டுவதோடு, இவ்வாறான மேற்தோற்றத்தில் நிலைமைகள் உருவாகும்போது தன்னை உறு உழைப்புச் சந்தையில் குறைந்த ஊதியத்திற்கு தள்ளப்பட்டோ அல்லது உதவியாளராகவோ தள்ளப்படும் நிலைமையை மௌனமாக ஏற்றுக்கொள்ள தயார்படுத்தப்பட்டாள்.

அமைச்சுப் பதவி வகித்த வில்ஹெம் பிரிக் இன் கருத்தின்படி "தாய்க்கு தமது பிள்ளைக்காக அர்ப்பணிப்பதும், மனைவி கனவனுக்காக அர்ர்ப்பணிப்பதும் பெண்களின் ஆயுட்கடமையானது." திருமணமாகாத பெண் தன்னை பாதுகாக்க "பெண்களுக்கே உரித்தான" தொழில்களை செய்வதற்கூடாகத் தான் தன்னை பேணக்கொள்ளலாம். இன்னொருவகையில் கூறப்போனால் தொழிலானது ஆண்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். என்றபோதும், நாசி அரசின் ஆணாதிக்கமானது முக்கியத்துவம் பெறுவதற்கு பிரதான காரணம் உளவியல் ரீதியான மற்றும் ஐதீகம் சார்ந்ததுமாகும். கட்சியின் தலைவர்கள் வெளியிட்ட அறிக்கைகளிலிருந்து இது வெளிப்படையாக தெரிகிறது. கட்சியின் ஆரம்பகால சித்தாந்தவாதியாக இருந்த கொட்பி பெடர் மக்களுக்கு பெண்களின் இயல்பு பற்றி தெளிவுபடுத்தும்போது இவ்வாறு குறிப்பிடுகிறார்-

பாலியல் ஜனநாயகத்தை திட்டமிட்டு யூதப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெண்கள் எம்மிடமிருந்து பறித்திருக்கிறார்கள். இளைஞர்களாகிய நாங்கள் ஒன்றுபட்டு இதனை இல்லாது செய்யவேண்டும். அப்போதுதான் உலகின் மிகவும் புனிதமான பொருளான வேலைக்காரி மற்றும் பணிப்பெண்ணாக செயற்படும் பெண்ணை மீளவும் நாங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

1934 செப்டம்பர் 8 அன்று நூரெம்பர்க்கில் ஹிட்லர் உரையாற்றியபோது கட்டற்ற பாலியல் புரட்சிக்கு காரணம் யூத கம்யூனிசமே என்று கூறினார்.

"பெண்கள் விடுதலை" பற்றிய கருத்தாக்கம் கண்டெடுக்கப்பட்டது யூதப்பெண்களிடமிருந்தே என்பதால் அதில் கருக்கொண்டு இருப்பதும் யூத ஆத்மாவே.

பெண்களின் நிலைமை குறித்து ஹிட்லர் கொண்டிருந்த கொள்கை மிகவும் தெளிவானவை. ஏனையோரைப்போலவே அவருக்கும், பெண்-ஆண் இரு பாலினருக்குமான வேறுபாடு இயற்கையானது. "அவளின் உலகமானது கணவன், குடும்பம், பிள்ளைகள், வீடு. ஆனால் இந்த சின்ன உலகம் எந்தவொரு காரணத்தைக்கொண்டும் பாதுகாக்காவிட்டால், அதைவிட பெரிய உலகத்தை பாதுகாப்பது யார்? பெண்ணானவள் கனவனின் உலகத்திற்குள் நுழைய முயற்சிப்பது, எமது உணர்வுகளுக்கு ஏற்புடையதல்ல. உண்மையில், இந்த இரு உலகங்களும் வேறுவேறாக இயங்குவது இயல்பானதாகத் தோன்றும். ஒரு சாராருக்கு உரிமையாவது என்பது உணர்வுபூர்வமான, ஆத்மார்த்த ரீதியலான பலமே. ஆண்களே உலகைத் தாங்கி நிற்கின்றனர். பெண்களே குடும்பத்தை தாங்கிநிற்கின்றனர். பெண்களின் உரிமை என கருத்தப்படுவது யாதெனில் இயற்கையால் அவளுக்கு நியமமாக்கப்பட்டுள்ள வாழ்க்கை முறைக்குள் கிடைக்கக்கூடிய கவனிப்பு அவளுக்கு கிடைக்கச்செய்வதையே. பெண்களும் ஆண்களும் பூரணமாகவே வெவ்வேறு வாழ்க்கையைஅனுபவிக்கும் உயிரிகள் இரண்டு. ஆணிடம் ஆட்சி செலுத்துவது தர்க்க அறிவு. அவன் ஆராய்வான். சில வேளைகளில் புதிய உலகைக் கண்டுபிடிப்பான். ஆனால் அவனின் தர்க்க அறிவால் பெறும் விளைவுகள் பெரும்பாலும் மாற்றமுறவும் கூடும். உணர்வுகள் தர்க்க அறிவை விட சில வேளைகளில் மேலாதிக்கம் செலுத்துகின்றன. பெண்கள் என்பவர்கள் உணர்வுகள்."

மேற்படி மேற்கோள் ஹிட்லரின் புகழ்பெற்ற நூலான "மயின் காம்ப்" என்பதில் எடுக்கப்பட்டது. அதில்இன்னுமொரு இடத்தில் "ஜேர்மனிய இளம் பெண்கள் அரசின் முன் சேவகர்கள். அவள் பிரஜையாவது மணமானதன் பின்னர்தான்." என்றும் குறிப்பிடுகிறார்.

முதலாவது நாசி வேலைத்திட்டதின் மூலம் கோரப்பட்ட பிரதான கோரிக்கை பெண்களின் வாக்குரிமையை இல்லாதொழிப்பது என்பது. 1918இல் வைமார் அரசால் ஜேர்மன் மக்கள் பெற்றுக்கொண்டு சர்வஜன வாக்குரிமை நாசி ஆட்சி யந்திரம் பதவிக்கு அமர்ந்ததும் இல்லாமல் செய்யப்பட்டது. பெண்கள் பொது வாழ்க்கையில் அந்நியப்படுத்தப்பட்டு, அரச பதவிகளில் இருந்து அகற்றப்படுவதும் நாசிகளின் கொள்கையாகும். ஹிட்லரின் "பெண்கள் கல்வியின் மூலம் இலக்காக்கிக் கொள்ளவேண்டியது எதிர்கால தாய்மைக்கு தயாராவது குறித்தே" எனும் கூற்று முக்கியமாக அவசியப்படுவது எதற்கெனில் இராணுவ அரசொன்றில் ஆட்பலத்தை அதிகரிப்பதற்கான நீண்டகால இலக்கை கருத்தில் போதே. நாட்டுக்காக மரணமாவதற்காக குழந்தைகள் அதிகளவில் பிறந்துகொண்டிருக்க வேண்டும். பதிவரதைத்தனத்தை காத்துக்கொண்டுஒரு நல்ல தாயாக இருப்பது ஒரு எடுத்தக்காட்டான பெண்ணின் கடமையாக வலியுற்றத்தப்படுவது, பாலியல் தேவைகளுடன் கருவளத்தையும் கட்டாயமாக பிணைத்து வைத்திருப்பதும் முக்கியமான வழிமுறையென தெரிகிறது. நாசிகள் குடும்பக்கட்டுப்பாட்டுக்கும், கருக்கலைப்புக்கும் எதிராக கொண்டுவரப்பட்ட சட்டங்கள் இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு. அது போல இந்த வழிகளின் மூலம் பெண்களின் பாலியல் மற்றம் கருவள உரிமைகளை தீர்மானிப்பதும், கட்டுப்படுத்துவதும் அரசின் நடைமுறை தத்துவமாக இருந்தது.

நாசி கட்சியின் ஆரம்பகாலத்தில் முக்கியமான பாத்திரமாற்றிய ப்லே ட்ஸ்க்ளிங் எனும் பெண்மணியும் இதே வகையான கருத்துக்களுக்கு ஊக்கமளித்துக் கொண்டிருந்தார். அவர் இப்படிக் கூறியிருந்தார். "ஜேர்மனிய பெண்களின் சீவியக் கடமை ஜேர்மனிய கனவனுக்கு சேவை செய்வதே. வீட்டைப்பேணிக்காத்து ஆணுக்கு திருப்தி ஏற்படுத்தக்கூடிய வகையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடந்துகொள்வதே" என்றார் அவர்.

நாசிக் கொள்கையானது ஆணுக்கே ஆணுக்குரிய ஒன்றாகவே இருந்து வந்தது என்பது சந்தேகத்திற்கிடமில்லை. பிரசாசரத்துறைக்கு பொறுப்பான அமைச்சர் கோயபல்ஸ் இன் கருத்தின்படி "நாசி இயக்கமானது இயல்பாகவே ஆண்களின் இயக்கமாகும். பொது வாழ்க்கையில் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதில் கடினமான காரியமில்லை. அரசியல் எனும் மிகப்பெரும் துறை இதிலொன்றாகும். இது நிச்சயமாக ஆண்களுக்கு உரித்தாக இருக்க வேண்டிய ஒன்று. நாங்கள் பொது வாழ்க்கையில் பெண்களை விரட்டும் போது அவ்வாறு செய்வது அவளிடமிருந்து விடுபடுவதற்கு அல்ல. அவளுக்கு உயர்ந்த கௌரவம் கொடுப்பதற்காகவே. பெண்களுக்கு உரித்தான பிரதானமானதும், முக்கியமானதுமான கடமையானது மனைவியாதலே. நாங்கள் இந்த கருத்திலிருந்து திரும்பினோமானால் அது பெரும் குற்றமாகும்."



நாசி "பாரீசிலிப்பு" குறித்து மிகவும் எமக்கு முக்கியமாவது அது பெண்களின் நிலைமையை சட்டரீதியில் கட்டுப்படுத்துவதாலேயே. நாசி அரச இயந்திரத்தின் கீழ் திருமணமாகாத பெண்-ஆண் ஆகிய இரு சாராரிடமிருந்தும் வரி வசூலிக்கப்பட்டது. 1933 யூன் 1ஆம் திகதி முக்கியத்துவம் வாய்ந்த விவாகக்கடன் சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி விவாகமொன்றின் மூலம் பெறப்பட்ட சகல குழந்தைக்கும் வரிவிலக்கு வழங்கப்பட்டது. பெண்ணின் பெயருக்கு இந்த கடன் வழங்கப்பட்டாலும் அதனை பெற்றுக் கொண்டது ஆண்தான். இந்த கடன் முறையின் மூலம் தாய்மார் தொழில்செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது.

நாசி ஜேர்மனில் குடும்பக்கட்டுப்பாடு பற்றிய பிரச்சாரங்கள் செய்வது வைத்தியர்களுக்குக் கூட தடைசெய்யப்பட்டிருந்ததானது மோசகரமான செயலாக இருந்தது. குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை செய்துகொண்டிருந்த நிலையங்கள் 1993இன் பின் மூடப்பட்டன. விசேட அனுமதிப்பத்திரமின்றி குடும்பக் கட்டுப்பாடு குறித்து ஆலோசனை வழங்குவது, பிரசுரங்கள் வெளியிடுவது, விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டிருந்தது.

நாசி அரசு பற்றிய ஒட்டுமொத்த சாராம்சமாக பார்க்கும்போது "புனிதமான தாய்மை" மற்றும் குடும்பத்தில் முக்கியத்துவத்தைப் பற்றியும் அறியும் அதே வேளை பொருளாதார காரணங்களும் காரணியாக தொழிற்பட்டிருக்கிறது. அரசுக்கு தேவைபட்டபடி மிகவும் கடினமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதற்காக ஜேர்மனிய பெண்கள் தொழில் ரீதியாகவும் அரசியல் சமூக பங்களிப்புகளிலிருந்து அந்நியப்படுத்தப் பட்டதோடு மட்டுமல்லாமல் குடும்பத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் கட்டாயம் நிறுவனமயப்படுவதற்காக அரசுக்கும், குடும்ப அலகுக்கும் இடையில் போட்டி நிலைமை எழுப்பட்டது.

ஆனால் நாசி அரசு ஆணாதிக்கத்தை சித்தாந்த வழிகொண்டு நடத்தப்பட்ட தன்மை பிரதானப்பட்டது. பெண்களின் மீதான அடக்குமுறைகளின் மேல் எழுப்பப்பட்ட சமூக கட்டமைப்புக்குள் சர்வாதிகார இராணுவ ஆட்சியந்திரத்தை நடத்துவதென்பது இலகுவாக இருந்தது.

மீண்டுமொருமுறை எமக்கு முடிவுக்கு வரக்கூடியதாக இருக்கும் விடயம், பாலியல் அரசியல் சமூக அமைப்புக்குள் பொருளாதார மற்றும் வேறும் துறைகளுடன் தொடர்புற்றிருக்கக்கூடும் ஆனால், அது பிரதானமாக ஏதாவது வாழ்முறை சார்ந்த கொள்கையாகவும் இருப்பது தான் எமது கவனத்துக்குரியது. எமது இருப்பின் மீது சகல மட்டங்களிலிருந்தும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. எனவே எமது மரபில் இறுக்கமான உளவியல் சித்தாந்த கட்டமைப்பு தோற்றுவிக்கப் பட்டிருக்கிறது. இன்று வரை அதிலிருந்து எவராலும் இலகுவாக கழன்றுவிடமுடியாதபடி இருக்கிறது.

-தமிழில் - சுதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மூன்று வருடங்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் கொண்ட புதிய கருத்தடை முறை.



கருத்தடை முறைகளின் வளர்ச்சி வரலாற்றில: முதற் தடவையாக புதிய முறையொன்று சுவிற்சலாந்தின் வைத்தியச் சந்தையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

Implanon 'இம்பிளானோன்' என்ற பெயரைச் கொண்ட சிறிய மெல்லிய நீண்ட வடிவமைப்பையுடைய ஒரு குழாய் போன்று காணப்படும் இதைப் பெண்கள் தமது முழங்கைக்கும் தோழுக்கும் இடைப்பட்ட கைப்பகுதியில் வைத்துக் கொள்ள முடியும். வைத்தியர்கள் சில நிமிட நேரங்களில் எந்த சத்திரசிகிச்சையும் அற்ற வகையில் இதனைத் தோலுக்குள் புகுத்திவிடுவார்கள். கவனித்துப் பார்க்கும் எவருக்கும் இது உள்ளே இருப்பது தெரியக்கூடிய வாய்ப்பு மிகக்குறைவானது.

அத்தோடு மூன்று வருட காலத்திற்கு கருத்தடை உத்தரவாதம் கொண்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை வெளியே எடுத்து மீண்டும் 3 வருடங்களின் பின் புதிய Implanon ஒன்றைப் பொருத்திக் கொண்டால் தொடர்ந்தும் மூன்று வருடங்களுக்கு 'கருத்தரிப்பு' ஏற்பட மாட்டாது. இதை உடலில் பொருத்துவதும் வெளியே எடுப்பதும் சில நிமிடங்களில் இலகுவாகச் செய்யக்கூடியது என்று வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நெதர்லாந்தின் மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமான யுமுணுமு - ழேடிநுடு நிறுவனத்தின் சகோதர நிறுவனமான ORGANON இதனைத் தயாரித்துள்ளது. இதற்கு புதிய வைத்தியக்கண்டுபிடிப்புத் தொடர்பாக பத்திரிகையாளர்கள: வைத்திய வட்டாரங்கள் உட்பட பலர் கலந்து கொண்ட அறிமுக வைபவம் ஒன்று சுவிற்சலார்ந்தின் சூரிச் நகரில் இடம் பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய ORGANON நிறுவனத்தின் வைத்திய பிரிவுப் பணிப்பாளர் Andreas Keush 14 ஆண்டு கால ஆய்வின் பின் இம்முறை கண்டுபிடிக்கப்பட்டது என்று கூறினார்.

இந்த IMPLANON மருந்தானது உடலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது என்றும் இதனால் சுரப்பிகிளில் ஏற்படும் செயற்பாட்டு மாற்றங்கள் கருத்தரிப்பதற்கான வாய்ப்பை இல்லாமல் செய்கின்றன. என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

2300பெண்களுக்கு இந்த முறையை தமது நிறுவனம் பரீட்சார்த்தமாகச் செய்ததாகவும் குறிப்பிட்ட காலங்களில் எந்த ஒரு பெண்ணும் கருத்திரிக்கவில்லை என்ற விபரமும் அவரால் அங்கு வெளியடப்பட்டன. மற்றைய எல்லாக் கருத்தடை முறைகளையும் விடவும் தற்போதுள்ள மிகச் சிறந்த கருத்தடை முறை இதுதான் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது நடைமுறையிலுள்ள கருத்தடை மாத்திரைகள் ஊசி, மருந்து என்பன பக்க விளைவுகளை ஏற்படுத்தக் கூடியவை. அத்தோடு குறுகிய காலத்தில் மட்டுமே பாதுகாப்பை வழங்கக்கூடியவை. இந்த வகையில் ஒப்பீட்டு ரீதீயில் புதியமுறை சிறந்தது எனக் கருதப்படுகின்றது.

இதுபற்றிக் கருத்து வெளியிட்டுள்ள பாசல(BASEL) பல்கலைக்கழக பேராசிரியர் JOHANNES BITZER இந்தப் புதிய கருத்தடை முறையானது இடைவெளிகளை அதிகரிக்க விரும்புவர்களுக்கு ஒரு பெரும் வாய்ப்பு என்று தெரிவித்துள்ளார். ஒருபிள்ளைக்கும் அடுத்த பிள்ளைக்கும் இடையே இரண்டு மூன்று ஆண்டுகள் இடைவெளியை விரும்பும் பெண்கள் இதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மூலம் அதிக நன்மை பெறுவார்கள் என்று அவர் கருதுகின்றார். பேராசிரியர் JOHANNES BITZER BASEL பல்கலைக்கழக வைத்திய பீடத்தின் மகப்பேற்றுப் பிரிவிற்குப் பொறுப்பான பேராசிரியராக கடமையாற்றுகிறார். குறிப்பாக வேலைக்குச் செல்லும் குடும்பப் பெண்களைப் பொறுத்த மட்டில் ஒருபெரும்நம்பிக்கையையும் உத்தரவாதத்தையும் இது வழங்குவதுடன் அவர்கள் மீதான சுமையையும் இது குறைக்கின்றது என்பது அவரது கருத்தாகவுள்ளது. அதேவேளை முற்றிலும் மாறுபட்ட கருத்து ஒன்றை சுவிற்சலாந்தின் லுசேர்ன் மாநில வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவு பிரதம வைத்தியர் BERNHARD SCHUSSELER வெளியிட்டுள்ளார் இந்த முறையானது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கருத்தடை ஊசியை ஏற்றிக் கொள்ளும் பெண்களுக்கு ஒரு மாற்று வழியாக அமைய முடியும் என்றும் இந்த வகையானவர்கள் ஒரு வீதத்தினர் மட்டும் என்றும் தெரிவத்துள்ளார்.



SCHUSSELER கூறியுள்ள இன்னொரு விடயம் என்ன வென்றால் பிள்ளைகளைப் பெற விரும்பும் பெண்களுக்கு இது ஒரு நீண்டகாலத் தடையாக அமைந்துவிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதனால் ஏற்படும் பக்க விளைவுகள் குறித்தும் அவர் எச்சரிக்கத் தவறவில்லை. ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்களில் இரத்தம் தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட்டன என்றும் மாதவிடாய் ஒழுங்காக ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். ஆய்வுக்குட்படுத்தபட்ட பெண்களில் 30 வீதமானவர்கள் அதவாது வருடாந்தம் 10வீதமானவர்கள் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் தமது உடலில் இருந்து IMPLANON ஐ அகற்றியுள்ளனர். என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள Basel பல்கலைக்கழகப் பேராசிரியர் இளம் பெண்கள் முதன் முறையாக இத்தடை முறையைப் பயன்படுத்துவதற்கு தன்னால் சிபார்சு செய்ய முடியாது என்றும் இது விடயத்தில் மகப்பேற்று வைத்தியர்களும் மகப்பேற்று உதவி நிறுவனங்களும் இதுபற்றிய ஆலோசனைகளை வழங்க முடியும் என்றும் சரியான பொருத்தமான முறையினை ஒவ்வொருவரும் சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்ய முடியும் என்றும் கூறியுள்ளார். SCHUSSLERன் கருத்தான பெண்கள் நாளாந்தம் பயன்படுத்துகின்ற மாத்திரைகளையே அதிகம் விரும்புகின்றார்கள் என்பதை தான் ஏற்றுக் கொள்வதாகவும் அவரது பதில் அமைந்துள்ளது.

இரத்தத்தாலும் ஓமோன் சுரப்பிகளாலும் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டை ORGANON மாத்திரம் பக்கவிளைவாகக் கொண்டிருக்கவில்லை. மாத்திரைகள், ஊசிமருந்துகள் போன்றவற்றிலும் இத்தாக்கம் உண்டு என்றும் கூறப்பட்டுள்ளது. செலவுரீதியாகவும் இம்முறை மலிவானது என்று ORGANON நிறுவனம் கருதுகின்றது. IMPLANON கான செலவு சுமார் 300 சுவிஸ் பிராங்குகளாகும். இது 3 வருடத்திற்கான செலவாகக் கணிக்கப்பட வேண்டும் என கருதுகின்றது.

கருத்தடை தொடர்பான ஆய்வுகள் பெரும்பாலும் பெண்களைக் கருத்தில் கொண்டே செய்யப்படுகின்றன. ஆண்களைக் கருத்தடைக்குட்படுத்துவது பற்றிய ஆய்வுகள் குறைவாகவேயுள்ளன. இந்த நிலையில் ORGANON நிறுவனம் ஆண்களுக்கான கருத்தடை முறையொன்றையும் குறித்து ஆய்வுகளை ஆரம்பித்து இருப்பதாகவும் 2005ம் ஆண்டளவிலேயே இவ்வாய்வின் முடிவுகள் வெளிவரும் என்றும் தெரிக்கப்படுகின்றது.

கருத்தடை முறைகளைப் பயன்படுத்துவோரின் விபரம்

மாத்திரைகள் 31 வீதத்தினர்

கொணடோம் 17 வீதத்தினர்

இயற்கைமுறை 5 வீதத்தினர்

ஊசி 6 வீதத்தினர்

எத்தடையும் இல்லை 22வீதத்தினர்.

**ஜெயந்தி மாலா குணசீலன்**
**சுவிஸ்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைக்கு எதைப்பற்றி எழுதலாம் சேர்?

ம்...

இண்டைக்கு எழுதுறதுக்கு புதினம் ஒண்டுமே இல்லை.

நீங்கள் என்ன சொன்னீர்கள்..?

எழுதிறதுக்குபுதினம் ஒண்டுமேயில்லையா, எல்லாத்தைப்பற்றியும் எழுதியாச்சி..இனி




பரபரப்பான புதினம் ஒண்டுமே இல்லை.

எல்லாம் அது எப்படி என்னமாதிரி அந்த சொத்துக்காக தாய்தகப்பனையும் சகோதரியையும் கொலை வழக்கு

இல்லை, அதப்பற்றி மேலதிகமாக எழுத ஒண்டும் இல்லை. இப்ப செய்தியிலேயே காட்டத் தொடங்கீற்றினம். மற்றது பத்திரிகை நியமங்களுக்கான அமைப்பு இப்ப கொஞ்சம் முழிப்பாக இருக்கு. எங்களுக்கு பின்னால் அவை திரிய வேண்டாம்.

-ம்.. இப்பிடி இருக்கேலாதே? எந்த நேரமும் ஏதாவது நடந்து கொண்டிருக்கும். அந்த பணக்காரின்ர நாய்குட்டி என்னமாதிரி?

-அது, ஒருநாளும் நல்ல இருக்கேல்ல..

-Bil clinton?

கன்னி மரியாமாதிரி குற்றமேயில்லாத ஆள்.

-பிரதமமந்திரியும் போதை பொருள் விஷயம்... பதில் சொல்லமோட்டேன் என்று சொன்னது ஞாபகம் இருக்கா..

-இல்ல சேர், அது பழையபுதினம்

-அப்படியென்றால் ஒப்ரா எல்லாரும் அதைப்பற்றி சண்டைபிடிக்கினம் அதைப்பற்றி?

அவை ஒரு நாளும் ஒரு உடன்பாட்டிற்கும் வராயினம். நாங்கள் அவைய பற்றி கடுமையாகவும் நிறைய எழுதிப்போட்டம்

-ஓம்.. ஓம்.. நீங்கள் சொல்லுறது சரிதான்.. உம் (பெருமூச்சுடன்) ஏதாவது பக்கத்தை நிரப்ப வேணுமே....

-சேர்

-ஓம்

-எனக்கு ஒரு யோசினை வருகுது..

-என்ன? சொல்லுங்கோ உடனே deadline இன்னும் கொஞ்ச நேரத்திலே

-இது வந்து கட்டாயம், விவாதிக்கப்படும். விவாதத்தை ஏற்படுத்தும்.

பெற்றோரின் கருத்துக்களை பாதுகாக்கின்ற முஸ்லீம் பெம்பிளைப்பிள்ளைய கண்டுபிடிக்கப் போறன்

முஸ்லிம் பொம்பிளை பிள்ளையை எங்க கண்டுபிடிக்கப்பபோகிறாய்?

-அது பெரிய பிரச்சினையில்லை சேர்.

-எப்படி

-எப்பவும், ஒரு அப்பாவியான ஒராள கண்டு பிடிக்கலாம். நான் இருக்கிற தொடர் அடுக்கு மாடியில இருந்து கொஞ்ச தூரத்தில ஒரு அழகான பொம்பிளைபிள்ளை இருக்கிறா. நான் அவவோட கதைக்கறன்.

அந்தப்பிள்ளை பெற்றோரைஆதரிக்கிறதில ஆர்வமில்லையெண்டு சொன்னா என்ன செய்யிறது எண்டு யோசித்துபார்த்தீர்களா?

-அப்ப வேறு ஒண்டக் கண்டுபிடிப்பம்.

ஓம். ஆனால் மற்றாக்களின்ர கேலிக்கு ஆளாகி போடாதைங்கோ எனக்கு 4 பக்கங்கள் வேணும் அஸ்பியோன கூட்டிக் கொண்டு போங்கோ. அவர் படம் எடுக்கிறதிலே கெட்டிக்காரன்

-என்ன நம்புங்கோ சேர்

-அந்த மானிடவியல் ஆய்வாளர். அவரோட ஒருக்கால் கதையுங்கோ அவரும் அதப் பற்றி ஒரு உத்தியோகபூர்வ கருத்துக் கூறும்படி கேளுங்கோ.

அதோட நீங்கள்

-ஓம்?

என்னை சேர் கூப்பிடவேண்டாம்.

ஓம் சேர்.

இன்னும் வரும்..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்றிலிருந்து இன்றுவரை சக்திக்கு பெண்களின் ஆக்கங்களுக்கு தட்டுப்பாடு நிலவியே வருகிறது. பெண்களின் ஆக்கங்களுக்கு முதலிடம் வழங்கவேண்டும் என்கின்ற ஆர்வத்தை எப்போதும் சோதனைக்குட்படுத்துவதாகவே ஒவ்வொரு தடவையும் சக்தி வெளிவந்துள்ளது. 10 வருடங்கள் சென்ற போதிலும் அந்த நிலமையில் கடுகளவும் மாற்றமில்லை. இந்த வரிகளை நாம் எழுதும் போது மிகவும் வேதனையும், அதேநேரம் பெண்ணிலைவாதிகள், பெண் எழுத்தாளர்கள் பெண் விடுதலையின் ஆர்வலர்கள் என தம்மைக் கூறிக்கொள்ளும் பெண்கள் மற்றும் ஈழவிடுதலை அமைப்புக்களில் அங்கம் வகித்தலே பெண்களின் உரிமை போராட்டத்தின் முக்கிய பணி என இறுமாந்திருக்கும் பெண்களுக்கு முன்னும் இந்த அவல நிலையை நிறுத்துகிறோம்.

புகலிடச் சூழலில் நடைபெற்று வரும் இலக்கியச் சந்திப்புகளில் சக்தி சஞ்சிகை பற்றி அறிமுகம், விமர்சனம் என்று நிகழ்ச்சி நிரலுக்கு எடுக்கப்பட்டாலும் அது சம்பந்தமாக *விமர்சிப்பது* பல தடவைகளில் நிகழாததுடன், இந்த ஆண்டில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பின் 26 வது அமர்வில் சக்தி சஞ்சிகை மீண்டும் *"அறிமுகத்திற்கு"* எடுக்கப்பட்டு விமர்சிக்கப்படாமலேயே முடிவுற்றுள்ளது.

ஆண்கள் இலக்கிய உலகம் இதையிட்டு பெருமிதம் அடையலாம் அத்துடன் பெண்விடுதலையில் ஆர்வம் உள்ளவர்களாக தம்மைக்காட்டிக் கொள்ளும் ஆண்களும் இது பற்றி திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஐரோப்பாவில் ஆரம்பத்தில் வெளிவந்த சகல சஞ்சிகைகளும் நின்று போன நிலையிலும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சக்தி பெண்கள் சஞ்சிகை என்பதால் அதனை யாராலும் நினைவில் வைத்திருக்க முடியவில்லை போலும்.

இவைகளைக் கடந்து...

இந்த 10 வருட காலத்தில் சக்தி பல புதிய பெண் எழுத்தாளர்களை வெளிக்கொணர்ந்திருக்கிறாள் என்பதையிட்டு பெருமிதம் அடைகிறோம்.

சக்தியில் தமது முதல் ஆக்கத்தை எழுதிய பல பெண்கள் இருக்கின்றனர் என்பதையிட்டு நாம் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

இன்றும் பல பெண்களுக்கு சக்தி களம் அமைத்துக் கொடுத்துள்ளாள் என்பதையும் பெருமையுடன் கூறிக் கொள்கிறோம்.

அத்துடன் புகலிடச் சூழலில் முதலாவது பெண்களின் சிறுகதைத் தொகுப்பை வெளியிட்டுள்ளதுடன் இந்த ஆண்டில் தமிழில் முதலாவது பெண்ணிய இணையச் சஞ்சிகையாக இணையத்தளத்திலும் தடம் பதித்துள்ளோம்.

*...நேற்று நடந்தவைகள்*
*முடிந்தவையாகட்டும்*
*நடக்கப்போறவை*
*எம்மால் ஆகட்டும்*
*நாங்கள் கரங்களைப்*
*பிணைத்துக்கொள்வோம்...*

-ஆசிரியர்குழு

சக்தியுடன் தொடர்புகளுக்கு

இணைய முகவரி http://www.geocities.com/pennsakthi

மின்னஞ்சல் முகவரி sakthee@england.com

தபால் முகவரி SAKTHI, BOKS 99 OPPSAL, 0619, OLSO 6, NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழ்ச் சமூகத்தில் விதவைகள் -





பேட்டி : ஆனந்தராணி
– *தயாநிதி (நோர்வே)*



மறுப்பு அறிக்கை
– *நிருபா (ஜெர்மனி)*



தேசிய விடுதலைப் போராட்டமும் பெண்களின் நினைவுகளும்
– *ஜெயந்திமாலா (சுவிஸ்)*



வாடகைக்கு கருப்பைகள்
– *ஐங்கரநேசன் (தமிழ்நாடு)*



EAST IS EAST
– *உமா (ஜெர்மனி)*

கிட்லரின் ஜெர்மனியில் பெண்கள்
- கேட்மிலட்





குழந்தை வளர்ப்பு-விலங்கோடு மனிதராய்
– *றஞ்சி (சுவிஸ்)*



நவீன கருத்தடை முறை
– *ஜெயந்திமாலா (சுவிஸ்)*



மழை மேகம் மூடிய ஒரு நாளில்
–*ஹதீஜா தய்ஜீக்*